# இந்திய விஞ்ஞானி சி. வி. ராமன் காலமானார்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

ஈழநாடு

THE BELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 283
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 7 றமழான் 22 ஞாயிற்றுக்கிழமை (22-11-70)




## நோபல் பரிசு பெற்றவர்

பெங்களூர், நவ.21 இந்தியாவின் பழம்பெரும் விஞ்ஞானியும் பௌதிகத் துறையில் ஆற்றிய அளப்பரிய சேவைக்காகநோபல் பரிசுபெற்றவருமானடாக்டர் சி வி ராமன் இன்று காலை பெங்களூரில் மரணமானார்.

சிலகாலமாகவே நோய் வாய்ப்பட்டிருந்த டாக்டர் ராமன்இன்று காலை 7-15க்கு மாரடைப்பால் உயிர் துறந்தார் என்று டாக்டர்கள் அறிவித்தனர். அவருக்கு வயது 82.

பௌதிகத்துறையில் பெரும் ஆராய்ச்சிகளைநடத்தியுள்ள அவர், 'ராமன் விளைவு' என்ற அரியஆராய்ச்சிக்காக 1930ம் ஆண்டில் நோபல்பரிசுபெற்றார்.

டாக்டர் ராமன் பௌதிகம் சம்பந்தமாக ஏராளமான நூல்களை எழுதியிருக்கிறார். அவரது நூல்கள்உலகின் பலநாடுகளில் பௌதிக பாடப்புத்தகங்களாகப் பாவிக்கப்படுகின்றன.

1917ம் ஆண்டு டாக்டர் ராமன் கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றினார். பின்னர் அவர் தாமே ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவினார். 1954ம் ஆண்டு அவருக்கு 'பாரதரத்ன' என்ற இந்திய ஜனாதிபதியின் விருது வழங்கப்பட்டது.

1888-ம் ஆண்டு நவம்பர் 7ந் திகதி பிறந்த டாக்டர் ராமன் சிறுவயதிலேயே கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார். சென்னையில் மாணவராகப் பயிலும் போதே ஒலி, ஒளி துறைகளில் பெரும் ஆராய்ச்சிகளைச் செய்துபுகழ்பெற்றிருந்தார்.

### ஜனாதிபதி கவலை

டாக்டர் ராமன் மறைவு குறித்து ஆழ்ந்த கவலைதெரிவித்து ஜனாதிபதி திரு வி வி. கிரி செய்தியொன்றை அவரது துணைவியார் லோகசுந்தரி ராமனுக்கு அனுப்பியிருக்கிறார். நாட்டுக்குப் பெரும் புகழ் தேடித்தந்த பெரிய மனிதரை இழந்துவிட்டோம்' என்று ஜனாதிபதி கவலை தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் மாபெரும் மேதையை இழந்து விட்டோம் என்றுகவலை தெரிவித்திருக்கிறார்.

டாக்டர் ராமன் உயிர் பிரிந்தபொழுது 77வயதான அவரது துணைவியாரும்மூத்த புதல்வர் ராதாகிருஷ்ணனும் அருகிலிருந்தார்கள். வானொலி விஞ்ஞானியான திரு. ராதாகிருஷ்ணன் ஆஸ்திரேலியாவில் பணிபுரிந்து வருகிறார்.

டாக்டர் ராமனின் இரண்டாவது புதல்வரான டாக்டர் சந்திரசேகரர் சுகவீனம் முற்றிருக்கிறார். சுகவீனம் காரணமாக அவர் தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ளமாட்டார் என்று கருதப்படுகின்றது.

டாக்டர் ராமனின்சொந்த விருப்பத்தின்படி அவரது இல்லத்துக்கருகிலுள்ள நிலத்தில் இன்று மாலை 6மணிக்கு சடலம் தகனம்செய்யப்படவிருக்கிறது.

# எழுதுவினைஞர் நியமனம் இனி தொகுதி ரீதியில் நடக்கும்

## அரசாங்கம் தீர்மானம்

கோட்டை, சனி இதுவரைகாலமும் அகில இலங்கை ரீதியில் நடைபெற்றுவந்த எழுதுவினைஞர் நியமனம் இனிமேல் பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெறவிருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள வாக்காளர்எண்ணிக்கைக் கேற்பவே நியமனங்களும் அமையும்.

இனிமேல் மத்திய எழுதுவினைஞர் பரீட்சை நடைபெறாது இப்பரீட்சை தற்போது அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ளது. எழுதுவினைஞர் சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரம்பும் போது வின்னப்பதாரிகளின் ஜி. சி. ஈ. சாதாரண உயர்தரபரீட்சைகளின் பெறுபேறுகளுக்கமையவே வையில்1200க்கு மேற்பட்ட வெற்றிடங்கள் ஏற்படும் இவையாவும் பரீட்சையின்றியே தெரிவுசெய்யப்படும் ஊழியர்களால் நிரப்பப்படும். இத்தொகையில் சில வெற்றிடங்கள் சிறு ஊழியர்களை நியமிப்பதன் மூலம் நிரப்பப்படலாம் எனத் தெரியவருகிறது.

—

### பிரதமர் திறந்துவைப்பார்

நித்தம்புவை, சனி நித்தம்புவை அஞ்சல் அலுவலகத்துக்காக 1,86,500ரூபாசெலவில் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய

## வடக்கில் மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி வடமாகாணத்தில் உள்ள கல்லூரிகளின் உயர்வகுப்பு மாணவர்களின் ஆர்ப்பாட்ட ஊர்வலம், இம்மாதம் 24-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது. தமிழ்மாணவர் பாரபட்சமாக நடத்தப்படுவதை ஆட்சேபித்து, இந்த ஊர்வலம் நடைபெறவிருப்பதாக துண்டுப் பிரசுரங்கள்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான உயர் வகுப்பு மாணவர்கள் நேற்று பெரியகடைப் பகுதிகளிலும், மற்றும் இடங்களிலும் ஊர்வலமாகச் சென்று தமது இயக்கத்திற்கு ஆதரவு திரட்டினர்.

## ஹாலிம் ஐசாக்மீது ஒழுங்கு நடவடிக்கை?

கொழும்பு, வெள்ளி கல்வி அமைச்சரின் மதிப்பைக்குறைக்க எத்தனித்ததாக ஹாலிம் ஐசாக் மீது நிகை ஹாலிம் ஐசாக்கின் தாக்குதல் ஐக்கிய முன்னணி அமைச்சர்களை தனியாக்கி தாக்குவதென்றதொரு சதி

## 'நாவலர் நீதிவாக்கியங்கள்'

யாழ்ப்பாணம், ஞாயிறு 'நாவலர் நீதிவாக்கியங்கள்' என்னும் சிறு நூலை யாழ்ப்பாணம் 'மில்க்வைற் சோப் தொழிற்சாலை'யினர் வெளியிட்டுள்ளனர். இலவச வெளியீடான இந்நூல் இந் நிறுவனத்தினரின் 14-வது வெளியீடாகும். 83 நாவலர் நீதி வாக்கியங்களையும் பிற விஷயங்களையும்கொண்ட இச்சிறு நூல் கைக்கு அடக்கமாக வெளியிடப்பட்டுள்ளது.

—

மன்னாரில்

## மூன்று நெற்சேமிப்பு நிலையங்கள் கட்டப்படும்

மன்னார், சனி அரசாங்கத்தின் உத்வேக கட்டிடங்கள் நிர்மாணத்திட்டத்தின் கீழ், மன்னார் பகுதியில் மூன்று நெற்சேமிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றின் நிர்மாண வேலைகள் அரசாங்க கட்டிடப் பகுதியினர், மாவட்ட எஞ்சினியர் திரு. சிவலிங்கத்தின் நேரடிப் பார்வையின் கீழ் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அரசாங்கத்தின் உத்தரவாத நெல்வாங்கும் திட்டத்தின் அடிப்படையில் நிர்மானிக்கப்படும். இந்த மூன்று நெற்சேமிப்பு நிலையங்களும் அளவக்கை, சிறுநாவற்குளம், ஆண்டாங்குளம் என்ற மூன்று கிராமங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொன்றும் இருபதினாயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டுவரும். இச்சேமிப்பு நிலையங்களில் ஒவ்வொன்றிலும் 50 ஆயிரம் புசல் நெல் சேமித்துவைக்கக்கூடிய இடவசதி இருக்கும் எனறு அறியப்படுகின்றது.

இவை மூன்றும் கட்டி முடிக்கப்பட்டதும், மன்னார் பகுதி விவசாயிகளிடமிருந்து கடந்த காலங்களைவிட மும்மடங்கு கூடுதலான நெல்லை உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் வாங்குவது இலகுவாக்கப்படும்.

வடி சாராயம் காய்ச்சிய

## குற்றத்தை ஒப்புக்கொண்ட பெண்ணுக்கு ரூ.350 அபராதம்

மன்னார், சனி வடிசாராயம் காய்ச்சிய குற்றத்தை நீதிமன்றத்தில் ஏற்றுக்கொண்ட பெண் ஒருவருக்கு மன்னார் தற்காலிக நீதவான் திரு ஏ. சிமான் பிள்ளை மூன்றுகுற்றச் சாட்டுகளுக்காக 350 ரூபா அபராதம் விதித்தார்.

மன்னார் பனங்கட்டிக் கொட்டு வட்டாரத்தில் திடீர் சோதனை நடத்தினர். அப்போது கசிப்புக் காய்ச்சுவதில் ஈடுபட்டிருந்த மூன்று பெண்களும் ஒரு ஆணும் கைது செய்யப்பட்டனர். பெருந்தொகையான தயார் செய்யப்பட்ட வடிசாராயம் நாற்பது கலன் கோடா, வடிசாராயம் காய்ச்சுவதற்குரிய உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

இக் குற்றச்செயல் சம்பந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அமைச்சரின் மதிப்பைக்குறைக்க எத்தனித்ததாக ஹாலிம் ஐசாக் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே ஒரு பகுதியினர் நெருக்கத் தொடங்கியுள்ளனர்

ஹாலிம் ஐசாக், சென்ற தேர்தலில் கொழும்பு மத்திய தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப்போட்டியிட்டவர் கட்சியின் உபதலைவர்களில் ஒருவருமாவர் சமீபத்தில், கல்வி அமைச்சர் கலந்து கொண்டதேநிர் விருந்துவைபவம் ஒன்றில் கல்விஅமைச்சர் பேசிதாக ஹாலிம் ஐசாக் ஓர் அறிக்கை வெளியிட்டு கல்வி அமைச்சர் தெரிவித்ததாக குறிப்பிட்ட கருத்தைக் கண்டித்திருந்தார் ஹாலிம் ஐசாக்கின் அறிக்கையை அந்த தேநீர் விருந்தில் கலந்துகொண்ட சிலர் மறுத்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 'நேசன்' என்ற பத்தி[ரிகை] ... நீக்குதல் ஐக்கிய முன்னணி அமைச்சர்களை தனியாக்கி தாக்குவதென்றதொரு சதி நடவடிக்கையின் ஓர் அம்சமேயாகும் என்று குறிப்பிட்டுள்ளது அரசாங்கத்தின் சோஷலிச கொள்கைகளை நேரடியாகத் தாக்குவதை விட இதுவே சிறந்த வழி என இவர்கள் கருதுவதாகவும் இப்பத்திரிகை கூறுகிறது

தேநீர் விருந்தில் கலந்துகொண்ட லங்கா சமசமாஜக் கட்சியின் மத்தியகுழு அங்கத்தவரும், காலிமாநகர சபை உறுப்பினருமான மன்சூர் மரைக்கார் எழுதிய கடிதம் ஒன்றையும் இப்பத்திரிகை வெளியிட்டுள்ளது அக்கடிதத்தில் ஹாலிம் ஐசாக் முன்னாள் அமைச்சர் எம் ஏச் முகம்மதின் மைத்துனர் என்றும்குறிப்பிட்டுள்ளார் (சி பி ஏ)

# கி. வா ஜ. சொற்பொழிவு



நீர்வேலி, ஞாயிறு

கலைமகள் ஆசிரியர் செந்தமிச்செல்வர் கி. வா. ஜகந்நாதன் நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் ''ஐந்துமுகந் தோன்றில் ஆறுமுகம் தோறும்'' என்னும் பொருள் பற்றி இன்று மாலை 7 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவாற்றுகிறார்,

ஜி. சி. ஈ, சாதாரண உயர் தரபரீட்சைகளின் பெறுபேறுகளுக்கு அமைய வே[லை]க்கு ஆட்கள் தெரிவு செய்யப்படுவார்கள், 1971-ம் ஆண்டு இச்சே

அலுவலகத்துக்காக 1,86,500ரூபாசெலவில் கட்டப்பட்டுள்ள ஒரு புதிய இரண்டு மாடிக் [கட்]டிடத்தை இன்று பிர[த]மத் திரி திறந்துவைப்பார்.

கவலை தெரிவித்திருக்கிறார். முன்னாள் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் விடுத்துள்ள ஒரு செய்தியில் நாட்டுக்கும் உலகுக்கும் அளப்பரிய சேவைபுரிந்த

மன்னார் பனங்கட்டிக் கொட்டு வட்டாரத்தில் உள்ள ஒருவீட்டில் பொலிஸ் சார்ஜன்ட் பி. எஸ். ஜெயவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ்கோஸ்டி

ருரிய உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினர்.

இக் குற்றச்செயல் சம்பந்தமாகக் கைதுசெய்யப்பட்ட சூசைப்பிள்ளை பெண்செல்வராணி, தவராஜா பெண் சிவக்கொழுந்து, ஜோசப் பெண் மேரிரேஸ், சின்னத்துரை ஜோசப் என்பவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். முதலாவது எதிரியான செல்வராணி எல்லாக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொள்ளவே ஏனைய மூன்று எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்

வடிசாராயம் காய்ச்சியது, வைத்திருந்தது வடிசாராயம் காய்ச்சுவதற்கான பொருட்கள் வைத்திருந்தது ஆகிய மூன்று குற்றச்சாட்டுகளுக்கும் நீதவான் திரு. சீமான்பிள்ளை செல்வராணிக்கு 350-00 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் கட்டத்தவறினால் ஆறு வாரம் கடூழிய மறியல் தண்டனை அனுபவிக்க வேண்டுமேலும் உத்தரவிட்டார்.

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# “மனுதாரின் சாட்சியங்களை எவராலும் ஏற்க முடியாது”

## திருச்செல்வம் தொடர்ந்து தொகுப்புரை

யாழ்ப்பாணம். ஞாயிறு 'உள்ளூராட்சி கமிஷனரால் சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்ட ஒரு முக்கியமான தஸ்தாவேஜு சுற்றறிக்கையைப்பற்றி தெரியுமா என்று நான் கேட்டபோது அவர் தனக்குத் தெரியாதென்று கூறினார். அப்படி அவர்கூறும்போது உண்மையைப் பேசவில்லையென்பதே எனது பணிவான விண்ணப்பமாகும்.'

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் 1.வது எதிர் மனுதாரின் சார்பில் ஆஜரான அட்வக்கேட் எஸ். திருச்செல்வம் கியூ சி. தொகுப்புரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கில் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினராக திரு வி ஏ அழகக்கோன் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து மன்னாரில் யு என் பி சார்பில் போட்டியிட்ட ரஹீமினால் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

1-வது எதிர்மனுதாரான அழகக்கோன் சார்பில் ஆஜரான அட்வக்கேட் எஸ் திருச்செல்வம் தொகுப்புரையில் மேலும் கூறியதாவது:

மனுதாரின் சாட்சியத்தை நான் பரிசீலனை செய்து அவர் உண்மையைப் பேசவில்லை என்பதைத் தெளிவாக்குவேன். மனுதாரின் சாட்சி பொருந்தாததாகும் மனுதார் அவரது சொந்தப் பத்திரங்களின் சாட்சியத்தின்படி மாறுபட்டுக் கூறியிருக்கிறார், பட்டினசபை தஸ்தாவேஜுகளுக்கு மாறுபட்டுக் கூறியிருக்கிறார். இவை அவர் உண்மை பேசவில்லை என்பதைக் காட்டுகிறது. பட்டினசபை முழுவதையும் அடக்கியாளக் கூடியவர்தான் மனுதார் என்பதை இவை தெளிவாக்குகிறது. பட்டினசபை நிர்வாகத்தை நடத்துபவரான அவர் தன் விருப்பப்படி நடத்திவிட்டு, கோர்ட்டிற்கு வந்து ஒரு தடவை ஒருவிதமாகவும், மற்றத்தடவை வேறுவிதமாகவும் கூறியுள்ளார். அவரது சாட்சியங்கள் எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாதென்பது தஸ்தாவேஜுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே சாட்சிகளைத் தேடிச்சென்றுள்ளதாக அவர் கூறியுள்ளார். அப்படியானால் பிரபு. தாராக்குண்டு பள்ளி சம்பவம் பற்றி ஒரு குற்றச்சாட்டு இருக்கிறது. எந்த ஒரு சம்பவம்பற்றியும் அந்தநேரமே பொலிசில் ஏன் முறைப்பாடு செய்யவில்லை. எல்லாப் பொலிஸ்நிலையங்களிலும் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின்படி இப்புத்தகத்தில் தேர்தல் குற்றங்கள் பொலிசாரினால் பதியப்படும்

இந்த வழக்கில் மனுதார் தமது சாட்சியத்தில் சாட்சிகளைத் தேடி மன்னார்த் தொகுதி எங்கும் சுற்றிவந்ததாகத் தெரிவித்துள்ளார் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மனுதார் எதையும் செய்யக்கூடியவர் என்பதே எனது பணிவான விண்ணப்பமாகும் இந்தக்கட்டத்தில் பிரபுவின் கவனத்திற்கு மனுதாரின் சாட்சியத்தைக் கொண்டுவர விரும்புகிறேன் கருப்பையா சினிமா நடத்துவதற்கு பட்டினசபை மண்டபத்தை குத்தகை கொடுத்த விஷயம்பற்றி நான் மனுதாரை கேள்வி கேட்டது ஞாபகமிருக்கிறது வழக்கமாக பொது வைபவங்களுக்கு கொடுக்கப்படும் பட்டினசபைமண்டபம் சினிமா நடாத்துவதற்குக் கொடுக்கப்பட்டது ஒரு வழக்கமற்ற நிலைமையாகும். அப்போது குறிக்கப்பட்ட சமயத்தில் கருப்பையாவிற்குக் கொடுக்கப்பட்ட குத்தகை ரத்துச் செய்யப்பட்டதா என நான் கேட்டபோது மனுதார் கருப்பையாவுக்கு குத்தகை கொடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்

பட்டனசபை மண்டபத்தை இனிமேல் குத்தகைக்கு விடுவதில்லையென்ற ஒரு தீர்மானத்தை மனுதார் தமது சாதுரியத்தினால் நிறைவேற்றியதோடு கூட்ட அறிக்கை விங்கிளாரம் பெற்பின்னர் அவர்கள் மற்றொரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். இத்தீர்மானம் முக்கியமானதாகும். இத்தீர்மானத்தின்படி மண்டபத்தை வேறு ஒருவருக்கு சில சுயநல நோக்கத்தோடு கொடுத்தார்கள். நான் இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்தும் போது இரு பிழைகள் ஏற்பட்டுள்ளதென்பதை தெரிவிக்கின்றேன். ஒன்று மண்டபம் குத்தகைக்குக் கொடுக்கக் கூடாதென்றும், ஏற்கனவே உள்ள குத்தகை ரத்துச் செய்யப்பட வேண்டும் என்ற தீர்மானமாகும். பட்டனசபை உபவிதிகளின்படி 6மாதத்திற்கு பின்னரே முந்திய தீர்மானத்திற்கு பின்னரே முந்திய தீர்மானத்திற்குமாறான தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். மற்றது மண்டபம் குத்தகைக்குகொடுக்க டெண்டர் கோரப்படவில்லையென்பதாகும்.

மனுதாரர் மன்னாரிலுள்ள ஜயன் தியேட்டர் பங்காளராகும் அதனால் அவர் மற்றொரு தியேட்டர் போடப்படுவதால் போட்டியிருக்குமெனக் கருதி அதனை விரும்பவில்லை,

மனுதாரர் உள்ளூராட்சி மன்றதலைவராக இருக்கிறார் பொது நிகழ்ச்சி கூட்டத்தின் கீழ் சினிமா தியேட்டருக்கு லைசென்ஸ் வழங்கும் சரியான அதிகாரம் மனுதாரிடம் தானிருக்கிறது. ஆனால் இந்த வழக்கில் அவர் முதலில் மண்டபத்தை குத்தகைக்கு கொடுப்பதில்லையென்ற தீர்மானத்தை நிறைவேற்றச் செய்துவிட்டு மீண்டும் மண்டபத்தை குத்தகைக்குக் கொடுக்க சிங்காரம் போன்ற ஒருவர் தனக்கு ஏற்ற ஒருவர் கிடைக்கும் வரை காத்திருக்கிறார்.

அடுத்து இறைச்சிக்கடை பிரச்னையை நோக்குமிடத்து நாங்கள் அதற்கான 1970ம் ஆண்டுக்குரிய கேள்வி விளம்பரத்தை வைத்திருக்கிறோம் நான் இங்கு அந்த விளம்பரத்தின் 2ம் பகுதியைவாசித்துக் காட்டுகிறேன். ஆனால் விளம்பரம் மீன்வர்த்தகத்தில் பரம்பரையாக ஈடுபடுவர் எனக் குறிப்பிட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிடுகிறார் நாம்இப்போது அவர் எவ்வாறு சபையைக்கட்டுப்படுத்தியுள்ளார் என்பதை நோக்குவோம் அவரது வாக்குமூலத்தில் இருந்து நான் வாசிக்கின்றேன் ஜயனு லப்தீன், சம்சுதீன் ஆகியஇருகேள்விதாரர்களே இருந்ததாகக் கூறுகிறார். ஆனால் மேலும் கேள்விதாரர்கள் இருந்தனர் என்பது இங்கு வாக்களித்ததிலிருந்து தெரியவருகிறது, அனுமதி பெற்ற கேள்விதாரரான சம்சுதீனுக்கு அவர் பரம்பரை மீன்வர்த்தகர் என்பதைக் காட்டுவதற்கு ஒருமாதஅவகாசம் கொடுக்கப்பட்டது எனசாட்சி இங்கு குறிப்பிட்டார் ஆனால் இது உண்மையல்ல. ஏனெனில் மனுதார் அவருடன் கொள்ளவுமில்லை பரம்பரை மீன் வர்த்தகர் என்பதைக் காட்டும்படியும்

(4-ம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை தேர்தல் வழக்கு இன்று விசாரணை

மாவிட்டபுரம், ஞாயிறு

பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப வழக்கு இன்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பருத்தித்துறைத் தொகுதியில் சென்ற தேர்தலின் போது, வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டமொன்றில் தமிழ்காங்கிரஸ்வேட்பாளர் திரு. என் நடராசாவுக்கு எதிராக பொய்ப்பிரசாரம் செய்ததாக தமிழரசுக்கட்சி ஆதரவாளராகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற கே. துரைரத்தினம், பருத்தித்துறை ஓடக்கரையைச் சேர்ந்த செல்வி மனோரம்மா அருச்சுனராசா ஆகியோர் மீது புலோலி வடக்கைச் சேர்ந்த சூசைப்பிள்ளை திருநாவுக்கரசு என்பவர் வ்வழக்கைத் தாக்கல்செய்துள்ளார்.

இவ்வழக்கு இன்று காலை கொழும்பு தேர்தல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்,

# வர்த்தக கோட்டா லைசென்ஸ் ‘கைமாறல்’ நடக்கிறதா?

## அரசாங்கம் கடும் நடவடிக்கை

கோட்டை, சனி

வர்த்தக கோட்டா லைசென்சுகளை சட்டவிரோதமாக வேறொருவருக்கு கொடுக்கும் வர்த்தகர்கள் மீது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவிருக்கிறது. இதுசம்பந்தமாக அரசாங்கத்திற்கு கிடைத்தபுகார்களைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இறக்குமதி லைசென்ஸ் வைத்திருக்கும் சில இலங்கை வர்த்தகர்கள் இலங்கையரல்லாத வர்த்தகர்களிடம் இந்த லைசென்சுகளைக் கொடுத்து பணம் பெற்றுவந்துள்ளதாக அரசாங்கத்துக்கு தகவல் எட்டியுள்ளதாக அறியப்படுகிறது:

இத்தகைய வர்த்தகர்கள் வருமானவரி இலாகாவிடம் ஏதேனும் வரி செலுத்தியுள்ளார்களா என்பதுபற்றிய விபரம் கோரிவிரைவில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன.

இலங்கையர் மயக்கொள்கைக்கு இவ்வித வர்த்தகர்கள் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டுஇருப்பதாக அரசாங்கம் கருதுகிறது. இத்தகைய வர்த்தகர்கள் கண்டு பிடிக்கப்படும்பட்சத்தில் அரசாங்கம் இவர்களது லைசென்சுகளை ரத்துச் செய்து இவர்கள்மீது தகுந்த சட்டநடவக்கை எடுக்கும்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்புத்துறை யோகர் சுவாமிஜியின் சமாதிக்கு அண்மையில், சுவாமியார் வீதியில் உபதபாற்கந்தோர், புங்கன்குளம் புகையிரத நிலையம் ஆகியவற்றிற்குமிக அண்மையில் கொழும்புத்துறை - யாழ்ப்பாணம் பஸ் வீதியில் உள்ள 4 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 6,500 ரூபாவுக்கு மேலாகக் கோருபவர்கள் விண்ணப்பிக்கவும்- 25A புங்கன்குளம் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

2520


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 22—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை. 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை 7-15 பாட்டு, 7-45 செய்திச்சுருள் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித்தொகுப்பு.


ராஜா (யாழ்ப்பாணம்) இன்று மட்டும்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா நடித்த
தினசரி 3 காட்சிகள்
செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன் நடித்த
தினசரி 3 காட்சிகள்
மாட்டுக்கார வேலன்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி 2-30, 6-30, 10-00
யோயா நாட்கள் 10-30 மெற்னி


நாவலர் சபை நடத்திய

# அனைத்திலங்கை மாணவர் கட்டுரைப் போட்டி முடிவுகள்

கோட்டை, சனி

இவ்வாண்டின் நாவலர் வாரத்தையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினர் நடாத்திய அனைத்திலங்கை மாணவர் கட்டுரைப் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:

முதற் பரிசு: (தங்கப்பதக்கம்) பெறுபவர்- செல்வி புஷ்பராணி சந்தசாமி, வந்தாலுமூலை மத்தியமகா வித்தியாலயம், செங்கலடி

இரண்டாம்பரிசு: (தங்கபதக்கம்) பெறுபவர்- செல்வி ஞானம்பாள் ஜெகராசா, இந்துக்கல்லூரி, கொக்குவில்.

மூன்றும் பரிசு: (தங்கப்பதக்கம்) பெறுவர்- செல்வி மாலினி இராசமாணிக்கம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

பாராட்டுப் பரிசு: (புத்தகங்கள்) பெறுவோர்- செல்வன் சி தேவசிங்கம், சிவானந்தவித்தியாலயம் கல்லடிஉப்போடை, மட்டக்களப்பு. செல்வன் செபி செ இராசசேகரன் புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை செல்வன் எஸ் எஸ் அப்பாஸ், அல்-அஷ்றக் மகா வித்தியாலயம், நிந்தாவூர். செல்வி இ மேரி யோகானந்தராணி, தமிழ் மகா வித்தியாலயம், வவனியா. செல்வி மல்லிகா பெரியசாமி, மத்தியமகாவித்தியாலயம், ஹேவாஹெட்ட. செல்வன் வெ அரிகுகசிவம், வித்தியானந்தகல்லூரி, முள்ளியவளை. செல்வன் வி விக்கினேஸ்வரன், நயினை மகாவித்தியாலயம். நயினாதீவு. செல்வன் க பாலசுந்தரராசா, இந்துக்கல்லூரி, சாவகச்சேரி செல்வன் ரா வயனப்பெருமாள், விவேகானந்த மகாவித்தியாலயம், கொழும்பு. செல்வன் க சிறிஜெயபாக்கியராசா, சிவானந்தவித்தியாலயம், மட்டக்களப்பு. செல்வன் அ தேவதாஸ், சென் யேம்ஸ் மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம். செல்வன் வ திருச்செல்வம், மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வன் ஸ்ரீமனோகரன், கதிரேசன்குமார மகாவித்தியாலயம், நாவலப்பிட்டி செல்வன் க செந்தில்நாதன், யாழ். நகர்க் கல்லூரி, காரைநகர். செல்வி மெஹருன்னிசா ஜெயினுலாப்தீன், சாராக்கல்லூரி, கம்பளை. செல்வன் அந்தோனி சத்தியசீலன், புனித சில்வஸ்டர் கல்லூரி, கண்டி. செல்வி க பவானி, மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை. செல்வி தையல்நாயகி சபாபதிப்பிள்ளை, பரி. அந்திரேய மகளிர் கல்லூரி, நாவலப்பிட்டி.

செல்வன் வே விநாயகமூர்த்தி, இந்துக்கல்லூரி, சாவகச்சேரி. செல்வி மா நாகேஸ்வரி, பாக்கிய வித்தியாலயம், மாத்தளை. செல்வன் க குகனேசன், மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை. செல்வி சு செந்தமிழ்ராணி, செம்மலை சைவப்பாடசாலை, அளம்பில், முல்லைத்தீவு செல்வி நளினி இராசரத்தினம், வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம். செல்வன் என் எவ் எம் மன்சூர், முஸ்லிம் மகாவித்தியாலயம், ஏறுவூர் செல்வன் பி இராசலிங்கம், அ த க பாடசாலை, கெங்கல்ல, கண்டி.

கூடைப்பந்தாட்டம்:

## சென். பற்றிக்ஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் கல்லூரிகளிடையே நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், யாழ்ப்

## ல: சு. கட்சியின் நிர்வாகிகள்

கோட்டை, சனி

சுதந்திரக் கட்சியின் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா உபதலைவர்கள் திருவாளர்கள்:- ஓ. பி. ஜயசூரியா மைத்திரிபால சேனநாயக்கா. ரி. பி. இலங்கரத்தின பதியுதீன் மாமூத், எல். பி ஜயசேன ஆனந்த குணசேகர, பி. பி ஜி. கலுகல்லே ரி. பி. சுபசிங்க, ரி. பி தென்னகோன், பி. டி. எஸ். குலரட்ன செயலாளர் திரு. கே. பி. ரத்னயக்கா இணைச்செயலாளர்கள். திரு. ஹேபேட்விக்ரமசிங்கா திருமதி, கே, எல். வி அழகியவான. திரு, சுமதிபால ஜயவர்த்தன பொருளாளர் திரு. கே. டொன் டேவிட்.

0 0 0

பருத்தித்துறை, சனி

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் நிர்வாக சபைக் கூட்டம்வடமராட்சி வடக்குக் கிழக்கு பிரிவுக் காரியாதிகாரி திரு மு தம்பிமுத்து தலைமையில் நடந்தபோது மேல் வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வீ செல்லத்தம்பி செயலாளர் திரு. ரி. கங்காதரம் செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் எம். செல்லத்துரை எஸ். வீ, சிவசுப்பிரமணியம் எஸ் வல்லிபுரம் கே கணபதிப்பிள்ளை, பீ இராமலிங்கம்.

## பரீட்சை

அகில இலங்கை ... பாடசாலை ஆசிரிய சங்கத்தி

# 'படுக்கையில் கிடந்த என் தாயாரை பார்ப்பதற்கு எதிரி விடவில்லை'

## பணமோசடி வழக்கில் டாக்டர் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருகோணமலையிலிருந்து வந்தபின் எதிரி தனக்கு பணம் தேவைப்படுவதாவும் சில பத்திரங்களில் என்னைக் கையெழுத்திடுமாறும் கேட்டார். எந்தப்பத்திரங்களிலும் நான் கையெழுத்திடமாட்டேன் என்று எதிரியிடம் கூறினேன். பத்திரங்களில் கையெழுத்திடும்படி எதிரி தினமும் என்னை வற்புறுத்தி வந்தார். எனது பெற்றோருடன் இதுபற்றி ஆலோசனை செய்வதாகக் கூறினேன் எதிரி என்னைப் பெற்றோரிடம் அழைத்துச் செல்ல மறுத்துவிட்டார். கணவனின் ஆலோசனை பெற திருகோணமலைக்கு அவரிடமாமது கூட்டிச் செல்லுமாறு கேட்டேன் அவர் தொடர்ந்து என்னைப் பேசியதோடு பத்திரங்களில் கையெழுத்திடுமாறு கூறினார்.

பணமோசடி வழக்கில் சாட்சியமளித்த கொட்டடியைச் சேர்ந்த ராஜரத்தினம் ராஜகோபால் மனைவி பரமேஸ்வரி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஜே. ஏ. எப். டயஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

எதிரி சார்பில் அட்வக்கேட் எஸ் தம்பித்துரை, புறக்டர் ஆர் விஸ்வநாதனின் உதவியுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் புறக்டர் வி நடராசா பொலிசாரின் உதவியுடன் ஆஜரானார்.

பாலேஸ்வரிசாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது எதிரி எனது பெற்றோரைத் தகாத வார்த்தைகளால் பேசினார் நான் இதனால் மனவேதனையடைந்ததோடு நிலைதடுமாறியிருந்தேன். பத்திரங்களில் கையெழுத்திடாவிட்டால் கலியாணத்தைத் தள்ளுபடி செய்வார் என்றும், அதனால் நான்றோட்டில் நிற்கவேண்டியநிலைஏற்படுமென்றும் கூறினார் எதிரி விரும்புவதை என் கணவன் செய்வார் என்பதுஎனக்குத் தெரியும் பயத்தின் காரணமாக நான் பத்திரங்களில் கையெழுத்திட்டபின்பணம் எடுக்கப்பட்டது தபால் கந்தோர் சேமிப்பு வங்கியிலிருந்துபணம் எடுப்பதற்காக நான் சுன்டிக்குளி தபால் கந்தோருக்குச் சென்றேன். 22-12-65ல் நான் பணம் எடுப்பதற்கு முதல் தடவையாக சுன்டிக்குளி தபால்கந்தோருக்குச் சென்றேன். நான் சுண்டிக்குளிதபால் கந்தோருக்கு எதிரியுடனும், அவரது 3-வது மகள் சிவகாமசுந்தரியுடனும் சென்றேன். தபால் கந்தோருக்கு நான் போகுமுன், அங்கு என்னை அழக்கூடாதென்றும் கையெழுத்திட வேண்டிய எல்லாப் பத்திரங்களிலும் கையெழுத்திட வேண்டுமென்றும், தபால் கந்தோர் அதிபர் கேட்டால், என் சொந்த விருப்பத்தில்பணம் எடுப்பதாகக் கூறவேண்டுமென்றும் எதிரி எச்சரித்திருந்தார். 22-12 65ல்தபால் நிலைய அதிபர் பணம் முழுவதையும் எதற்காக எடுப்பதாக என்னிடம் கேட்டார் பணத்தை கூடிய வட்டிக்கு கொடுக்கப்போவதாக எதிரி கூறினார். அன்றைய தினம் எவ்வளவு தொகை எடுக்கப்பட்டதென எனக்குத் தெரியாது. பணம் எடுத்தபின் நான் ஈச்சமட்டைக்கு வந்தேன்.

8-1-66ல்பின் நான் சுண்டிக்குளி தபால் நிலையத்திற்குச் சென்றேன். என் புத்தகத்தில் உள்ள முழுப்பணமும் எடுக்கப்பட்டுவிட்டதாக நான்முன்னர் கருதியிருந்தேன். இரண்டாவது தடவை நான் தபால் கந்தோருக்கு போனபோது. கொஞ்ச பணம் இருப்பதாக அறிந்துகொண்டேன்.

பணம் இலங்கை சேமிப்பு வங்கி, தபால் கந்தோர் சேமிப்பு வங்கி, சேமிப்பு பத்திரங்களில் போடப்பட்டிருந்தது. இரண்டாவது தடவைநான் தபால் கந்தோருக்கு போகுமுன் எதிரி முன்னர் போல எச்சரித்திருந்தார் 8-1-66ல் எவ்வளவு தொகை எடுக்கப்பட்டதென்று எனக்குத் தெரியாது, ஒவ்வொரு தடவையும் எதிரி பணத்தை எண்ணி தனதுபையில் எடுத்துச் சென்றார். இரண்டு தடவையும், நான் வீட்டிற்கு வந்தபின்னர் தபால் கந்தோரில் எடுத்த பணத்தை தரும்படி எதிரியிடம் கேட்டேன் எனக்கு பணத்தைதர அவர் மறுத்துவிட்டார். அவர் பணத்தை வைத்திருந்தார் எனக்கு ஆறுமுகம் என்பவரைத் தெரியும். 65 ம் ஆண்டு டிசம்பர் கடைசிப் பகுதியில் அவர் எதிரியின் வீட்டிற்கு வந்திருக்கிறார் ஆறுமுகம் வருமுன், அவரது மனைவியும் மகனும் வந்து எனதுதாயார் சுகவீனமுற்று படுக்கையிலிருப்பதாக தெரிவித்தனர். அந்தநேரம் எனது தாயாரைப் போய் பார்க்க அனுமதிக்குமாறு எதிரியைக் கேட்டேன். அவர் மறுத்துவிட்டார்.

ஆறுமுகம் எனது மைத்துனர். வீட்டுக்காரர்கள் இருந்ததால், தபால் கந்தோரில் பணம் எடுத்ததைப் பற்றி நான் ஆறுமுகத்திடம் சொல்லவில்லை பணம் எடுத்ததுபற்றி எவருக்கும் சொல்லக்கூடாதென எதிரி ஏற்கனவே எச்சரித்திருந்தார் ஆறுமுகத்திற்கு இதனை சொல்வதன் மூலம் எந்தபயனும் ஏற்படாது அந்தநேரம், என்பெற்றார் வீட்டிற்கு ஆறுமுகத்துடன் செல்வது பற்றி நான் எண்ணவில்லை.

66 ஜனவரியில் இலங்கை சேமிப்பு வங்கியில் பணம் எடுப்பதற்காகநான் ஒரு பத்திரத்தில் கையெழுத்திட்டேன் இப்பணம் தான் கடைசியாக இருக்கும் தொகையென்றும், இனிமேல் தபால் கந்தோருக்கு போக வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் எதிரி என்னிடம் கூறினார். இத்தடவை 13,000 ரூபா எடுக்கப்பட்டது. ஏற்கனவே 37000 ரூபா எடுக்கப்பட்டது அன்றையதினம், ஆறுமுகமும்ராமகுமாரசாமியும் துரைகுமாரசாமியும் வந்திருந்தனர் அந்தநேரம் நான் விறாந்தையில் நின்றுகொண்டிருந்தேன். படுக்கையிலிருந்த என தாயாரை ஏன் வந்து பார்க்கவில்லை என ஆறுமுகம் என்னிடம் கேட்டார். உடனே நான் அழுதேன் தேவையற்ற விஷயங்கள் கதைக்கவேண்டாமென எதிரியின் மனைவி ஆறுமுகத்திடம் கூறினார், அப்பொழுது எதிரிக்கும் ஆறுமுகத்திற்குமிடையில் வாக்குவாதம் நடந்தது இதன் காரணமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒரு புகார் செய்யப்பட்டது. பொலிஸ் இவ்விஷயமாக விசாரணைசெய்தபோதும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

19-1-66-ல்எதிரிஇலங்கை சேமிப்புவங்கி மனேசருக்கு எழுதப்பட்ட கடிதமொன்றின் மாதிரிப்பிரதியை தந்தார். நான் அதனை திரும்ப எழுதி கையெழுத்திட்டு எதிரியிடம் கொடுத்தேன்.

செக் என்றால் என்னவென்று எனக்குத்தெரியும். எதிரியின் வீட்டிலிருக்கும்போது எனக்கு செக் கிடைக்கவில்லை. நான் எதிரியின் வீட்டிலிருந்த போதுதான் நான் என்றுவது செக்கில் கையெழுத்திடவில்லை. எனது சார்பாக, எவரையும் செக்கில் கையெழுத்திடும்படி நான் அங்கீகாரமளிக்கவில்லை. 8-1-66 ல் நான் அனுப்பிய விண்ணப்பத்

(4 -ம் பக்கம் பார்க்க)

சண்முகநாதனுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் நாட்டம்
... அவரை வெகு துரிதமாக லண்டனுக்கு அனுப்பி
வைத்தோம், பீ. ஓ. ஏ. சி. வி. சி 10 விமானத்தில்...

தினசரி 2-30, 6-30 , 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

ஹாரிகளிடையே நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி 17 வயதுப் பிரிவிலும், 20 வயதுப் பிரிவிலும் சம்பியனாக வந்துள்ளது.
(தே. நி.)

## வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
மாஸ்டர் வெங்கடேசன்-ஐமுனா
நடித்த
வளர்த்த பாசம்

## ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-306-30, 10-00
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நடித்த
பெண்ணை
வாழவிடுங்கள்

MANOHARA
Jaffna
Daily 4-45,7&9-45p m
Poya days 4 shows
Barric Ingham
in
A CHALLENGE FOR
ROBBIN HOOD

REGAL
Jaffna
Daily
10-30, 4-00,7-00 -45
Keir Dullea
in
2001: A SPACE
ODYSSEY

கொடிகாமம், சனி
அகில இலங்கை அரசினர் பாடசாலை ஆசிரிய சங்கத்தினால் ...ம் வகுப்புத் தொடக்கம் ...ம் வகுப்பு வரைக்கும் நடாத்தப்பெறும் பரீட்சை இம்மாதம் 21ம் தேதிசனிக்கிழமை நடாத்தப்படவிருக்கிறது.

# இன்றைய பலன்

கார்த்திகைமாதம்7 -ந்திகதி
(22-11-70)

மேஷம்- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழ்வீர்கள். பிதாவழித்தனமும் சேரும். தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும்.

ரிஷபம்- கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும். எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர்கள்.

மிதுனம்- மதிப்பு உயரும் இல்லத்தில் இனிமை தவழும். அறிஞர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

கடகம்- தொழில்புரியும் இடத்தில்கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

சிம்மம்- சுற்றுடலில் புதிய உற்சாகம் ஏற்படும். உள்ளத்தில் உறுதி தோன்றும். கண்ணியமான தினம்.

கன்னி- இதயப்படுதாவில் இன்பக்கூத்து. வாழ்க்கை சௌகரியங்கள் நிறைந்ததாக இருக்கும்.

துலாம்- சிறிய விடயத்திற்குக் கூட அதிக ஆத்திரம் தோன்றக்கூடும். மற்றவர்களின் குறுக்கு வழித்தலையீடும் இடம் பெறும்.

விருட்சிகம்- ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர்களின் மத்தியில் ஒற்றுமை மலரும். பொன்னான தினம்.

தனுசு- உறவினர்களின் வருகை உங்களுக்கு உவகையைத் தரும். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும்

மகரம்- தவறுகள் நடக்கலாம் நிலையும் தடுமாறும். நண்பர்களே காலை வாரிவிக்கூடும். சிலருக்கு அன்னியவாசம் ஏற்படலாம்

கும்பம்- குளுமையான சம்பவம் இடம்பெறும் வாழ்க்கையில் பசுமை தோன்றும். சாஸ்திர வழியால் இலாபமும் கிடைக்கும்.

மீனம்- விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும். மயக்கும்மொழிகளால் பணத்தை இழக்க நேரிடலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஆகவே அவரை வெகு துரிதமாக லண்டனுக்கு அனுப்பி வைத்தோம், பீ. ஓ. ஏ. சி. வி. சி 10 விமானத்தில்...


எமது வி. சி. 10 லண்டன் வர்த்தகத்துக்குத் துரித மார்க்கம் மட்டுமல்ல, சிறந்ததும் அதுவே. சண்முகநாதனைக் கேளுங்கள் சொல்வார்.

ஒய்யாரமாக் உட்கார்ந்திருக்கக் கிடைத்த சாய்வு நாற்காலி; அன்பும் பண்பும் நிறைந்த பிரிட்டிஷ், மற்றும் ஆசியப் பெண்களின் உபசரிப்பு; தமது பிறீவ்கேஸ் காலடியில் இடறுமல் பத்திரமாக இருக்க தலைக்கு மேலே நிலைப்பெட்டி இவை பற்றியெல்லாம் அவர் சொல்லுவார்.

ஆனல் விமானத்தின் பின்புறத்தில் இருந்த ரோள்ஸ் ரோய்ஸ் எஞ்சின்கள் பற்றி அவர் எதுவும் சொல்லமாட்டார் — அவற்றின் சத்தத்தை அவர் கேட்கவே இல்லை:

வெள்ளைக்கார மற்றும் ஆசிய விமான ஊழியரின் உபசாரம், மேல்நாட்டு கீழ்நாட்டு உணவு வகையருக்கள் இவை எல்லாம் சண்முகநாதன் வாழ்நாளில் காணுத அனுபவம். அதில் திளைத்து மிகுந்த உற்சாகத்துடன் ஹீத்ரோ விமானத் தளத்தில் இறங்கினுர். வியாபார முயற்சிக்குத் தயாராக.

சண்முகநாதனுக்கு மட்டும்தாஜ இந்த வாய்ப்பு, நீங்களும் அனுபவித்தால் என்ன?



BOAC

பீ. ஓ. ஏ. சீ. உங்களைக் கரிசனையுடன் உபசரிக்கிறது.

உங்கள் பிரயாண ஏஜெண்டுடன் கலந்தாலோசியுங்கள் அல்லது பீ. ஓ. ஏ. சி. க்கு போன் செய்யுங்கள். — 27731/5

பிரிட்டிஷ் ஓவர்சீஸ் எயர்வேய்ஸ் கோர்ப்பரேசன் - எயர் சிலோன், குவான்டாஸ் ஆகியவற்றுடன் இணைந்தது.

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது

## வின்ஸர் யாழ்ப்பாணம்

தினசரி காலை 10-30, பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 9-45 மணிக்கு

★ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ
★ மனோகர் ★ ஆனந்தன் ★ நாகேஷ்
★ விஜயலலிதா ★ சுந்தரராஜன்

மற்றும் பலர் திறம்பட நடித்த
தேவரின்

# நேர்வழி

டைரக்ஷன்: எம். ஜி. பாலு இசை: பி. எஸ். திவாகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ. நா. வில்

# சீனவை அனுமதிக்கும் தீர்மானத்துக்கு சாதாரண பெரும்பான்மை ஆதரவு

## 20 வருடங்களில் புதிய திருப்பம்

நியுயோர்க், நவம்பர் 21

கம்யூனிஸ்ட் சீனவை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை 20வது வருடமாக ஐ. நா. பொதுச் சபை நேற்று நிராகரித்தது. என்றாலும் முதல் முறையாக சீனவை ஐ. நா.வில் அனுமதிக்கவேண்டும் என்ற தீர்மானத்துக்கு சாதாரணப்பெரும்பான்மை வாக்குகள் கிடைத்திருப்பது இந்தப் பிரச்னையில் முக்கிய திருப்பமாகக் கருதப்படுகின்றது.

கம்யூனிஸ்ட் சீனவை ஐக்கிய நாடுகள் சபையில் அனுமதித்து தேசிய சீனவை (ஃபோர் மோசா) வெளியேற்றவேண்டும் என்று கூறும் தீர்மானத்தை அல்பேனியாவும் அல்ஜீரியாவும் பொதுச் சபையில் கொண்டு வந்தன. இம்மாதிரி தீர்மானங்கள் கடந்த 20 ஆண்டுகளாக தொடர்ந்து வருடா வருடம் தாக்கல்செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டு வந்துள்ளன. ஆனல் இம்முறைதான் செஞ்சீனவை அனுமதிக்கவேண்டும் என்ற தீர்மானம் நிராகரிக்கப்பட்டபோதிலும் சாதாரணப் பெரும்பான்மை வாக்குகளை பெற்றிருக்கின்றது

செஞ்சீனவை ஐ நா சபையில் அனுமதிக்கவேண்டும் என்ற விஷயம் மிகமுக்கியமான விஷயம் என்பதால் இதுசம்பந்தமான தீர்மானம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேறினல் மாத்திரமே செல்லுபடியாகும் என்று ஏற்கனவே ஒரு தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதனல் இந்தத் தீர்மானத்துக்கு பெரும்பான்மை கிடைத்தபோதிலும் சீனவின் நுழைவு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அனுமதிக்கவேண்டும்என்ற தீர்மானத்தை ஆதரித்து 51 நாடுகளும் அனுமதிப்பதை எதிர்த்து 49 நாடுகளும் வாக்களித்தன 25 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. செஞ்சீனவைத் தொடர்ந்தும் அனுமதிக்காமல் வைத்திருக்கமுடியாது என்பதையே இந்தமுறை வாக்கெடுப்பிலிருந்து தெரிய வருவதாக ராஜதந்திரவட்டாரங்கள் தெரிவித்தன. தீர்மானத்துக்கு சாதாரணப் பெரும்பான்மை கிடைத்திருப்பது பெரிய வெற்றியாகும் என்று வேறு சிலர் கூறினர்கள்.

சீனவை ஐ. நா. சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்தை இந்தியாவும் ஆதரித்து வாக்களித்தது. சீனவுக்கும் இந்தியாவுக்குமிடையில் கடுத்து முரண்பாடுகள் ஏற்பட்டதின் காரணமாக 1953ம் ஆண்டுக்குப்பின் சீனவை அனுமதிக்கும்தீர்மானத்தின் மீது இந்தியப் பிரதிநிதிகள் உரைநிகழ்த்துவதை நிறுத்தியிருந்தார்கள் ஆனல் இம்முறை இந்தியப் பிரதிநிதி சீனவை அனுமதிக்கவேண்டியதின் அவசியம்பற்றி எடுத்தியம்பினர். இது ஒரு சாதாரணவிஷயமாகவே இந்தியாகருதுகின்றது. சீனவை அனுமதிக்க மூன்றில்இரண்டு பங்கு பெரும்பான்மை அவசியமில்லையென்று இந்தியப் பிரதிநிதி கூறினர்.

### பாகிஸ்தானுக்கு பிரதமர் அனுதாபம்

கொழும்பு, சனி

பாகிஸ்தான் ஜனதிபதி யாஹ்யாகானுக்கு பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுதாபச்செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். அவரது செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

கிழக்குப் பாகிஸ்தானில் வீசிய சூறுவளிக்காற்றென்றினல் விளைவிக்கப்பட்டிடுமென நேர்ந்த திகிலூட்டும் பேரிடரையும் அப்பேய்க் காற்று பயங்கரமாகப் பலிகொண்ட சாக்காட்டையும், சேதத்தையும் பற்றிக் கேள்வியுற்று அதிர்சியடைந்தேன் இவ்விடுக்ககணின் போது இலங்கை அரசாங்கமும் மக்களும் யானும்எமது மனமார்ந்த அனுதாபங்களை அதி உத்தமராம் தங்களுக்கும் தங்கள் மூலம்பாகிஸ்தான் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேம்.

இந்திடீர் விபத்தில் குறிப்பாக உயிர்ச்சேதத்தால் பரிதவிப்போர்க்கும் பிறவாறுபாதிக்கப்பட்டோர்க்குமாக அவர்தம் இவ்வவல

## கிழக்கு பாகிஸ்தானுக்கு தாராளமாக உதவ கோரிக்கை

### ஐ. நா. தீர்மானம்

நியுயோர்க், நவ.21

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளினல் பாதிக்கப்பட்ட பகுதிமக்களின் நிவாரணத்திற்காக தாராளமாக உதவி புரியும்படி உலகநாடுகளையும், ஐ. நா பொதுக் காரிய தரிசியையும், ஸ்தாபனங்களையும் பொதுச்சபை கேட்டுக் கொண்டிருக்கின்றது.

இது சம்பந்தமான ஒரு தீர்மானம் பொதுச்சபையில் நிறைவேற்றப் பட்டது.

இதற்கிடையில் அமெரிக்காவிலிருந்தும் பிரிட்டனிலிருந்தும் விமானங்களில் நிவாரண உதவிகள் டாக்காவில் வந்து சேர்ந்துள்ளன. அமெரிக்க, பிரிட்டிஷ், சீன உதவிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்குப் போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்க, பிரிட்டிஷ்ஹெலிகொப்டர்கள் உணவுப்பொட்டணிகளையும், மருந்து வகைகளையும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் போட்டுவருகின்றன. பாகிஸ்தான் ராணுவத்தினர் பாதிக்கப்பட்ட பகுதிகளில், குழாய்க்கிணறுகளைத் தோண்டுவதிலும் உடைந்துபோன பாலங்களைத்திருத்துவதிலும் ஈடுபட்டிருக்கின்றனர்கள். சிலபகுதிகள் இன்னமும் நீரில் மூழ்கிப்போய் இருக்கின்றன. நல்ல தண்ணீரும், உணவு, மருந்துகள் போன்றவைக்கே பெரிதும் தேவை ஏற்பட்டுள்ளது. மக்கள் சேற்று நீரையே குடிக்கிறர்கள். உணவுப் பொட்டலங்களை அவர்கள் பெற்றுக் கொள்கிறர்கள். பணம் கொடுத்தால் மறுத்து விடுகிறர்கள்.

கொள்ளை நோய்கள் பரவாமலிருப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தூரத்திலுள்ள கிராமங்களுக்கு உதவிகள் போய்க்கிடைப்பதில் இன்னமும் கஷ்டமிருப்பதாக அதிகாரிகள் கூறுகிறர்கள். சில பகுதிகளுக்கு படகுகளில் போவதும் கூட கஷ்டமாகத் தெரிகின்றதாம்.

## முப்படை, பொலிஸ் பணிகள் முழுக்கவும் சிங்களத்தில்

### பிரதமர் உத்தரவு

கோட்டை, சனி

அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கிணங்க சிங்களத்தை முழுமையாகப் பயன்படுத்தும்படி முப்படைத் தளபதிகளுக்கும் பொலிஸ் அதிபருக்கும் பிரதமமந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா உத்தரவுபிறப்பித்திருக்கிறர்.

குறிப்பாக [illegible] இலாகாவில் [illegible] மக்கள் புரிந்துகொள்ளக் கதிரைகளுக்கு ஏற்பாடு செய்யும்படியும் பிரதமர் யோசனை கூறியுள்ளார்.

(இத்தகவல்களை 'றிவிரெஸ' பத்திரிகை வெளியிட்டிருக்கின்றது)

### பூநகரிப் பகுதியில் முந்திரிகைச் செய்கை

#### அமைச்சர் தகவல்

கொழும்பு, சனி

[illegible] முந்திரிகைச் செய்கைபண்ணுவதற்கான சாத்தியங்கள்பற்றித்தோட் [illegible] செய்தேன், பூநகரிப்பகுதியில் நிலத்துக்கடியில் நிறைய நீர்இருப்பதாக அவர் உறுதியளித்தார் இந்த நீரைப்

### பண்டிதர்-வித்துவான்கள் விண்ணப்பம்

பருத்தித்துறை, சனி

விரைவில் நடக்கவிருக்கும் முதலாந்தர விசேட பதவிகளுக்கும், முதலாந்தர அதிபர் பதவிகளுக்கும், பண்டிதர்களும் வித்துவான்களும் மனுப்பண்ணுகின்றனர் இதுவரை பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருந்த பதவிகள், இப்பொழுது பண்டிதர், வித்துவான்களும் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோன்ற அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

......

### இலங்கையில் பெண்தூதுவர்

கொழும்பு, சனி

இலங்கைக்கு யூகோஸ்லாவியாவின் அடுத்த தூதர் ஒரு பெண்மணியாகவே இருப்பாரென யூகோஸ்லாவிய தூதுரகம் தெரிவித்துள்ளது.

தற்போதைய யூகோஸ்லாவிய தூதர்திரு. போன் சேபநோவிக் டிசம்பர் 6ம் திகதி நாடு திரும்புகிறர். புதிய தூதர் நத்தாருக்குப் பின்னர் நியமனம் பெறுவார் எனத் தெரியவருகிறது.

ஐக்கிய அமெரிக்காவே முதன்முதலில் ஒருபெண்ணை இலங்கைக்குத்தூதராக நியமித்தநாடாகும். 1960ம் ஆண்டு செல்வி பிரான்ஸிஸ் வில்ஸிஸ்என்ற பெண்மணியை தூதராக நியமித்தது.

(சி பி ஏ)

......

### ஆசிரிய கலாசாலையில் 1200 தேக்க மரம்

பருத்தித்துறை. சனி

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வளவில், வவனியாப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்ட 1200 தேக்க மரங்கள் நாட்டப்பட்டன.

கலாசாலைச் சாரணரால் நடாத்தப்பட்ட இவ்விழாவில் கலாசாலை அதிபர் திரு.

### உலக சுகாதார அதிபர் விஜயம்

கோட்டை, சனி

உலக சுகாதார ஸ்தாபன டைரக்டர் திரு. எம். டி. ஹண்டோ இம்மாத இறுதியில் கொழும்புவரவிருக்கிறர். உலக சுகாதார ஸ்தாபனத்தால் இவர்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் சுகாதார சேவைக்கு எவ்விதத்தில் செலவிடப்பட்டுள்ளதென்பதைக் கண்டறிவதற்காக அவர் இங்குவருகிறர்.

டிசம்பர் 1-ம் திகதி அவர் பிரதமரையும் மகாதேசாதிபதியையும் சந்திப்பார். 5 நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும்போது, திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வார்.

......

### கல்வி அமைச்சருக்கு பாராட்டு

மன்னர், சனி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய கமிட்டிக்கூட்டத்தில் கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூது மீண்டும் உபதலைவராகத் தெரிவானதைப் பாராட்டி, மன்னர் இ. சோ. மு. தலைவரும், ஸ்ரீ ல. சு. கட்சி அமைப்பாளருமான ஜனப் என். எஸ். ஏ. காதர் தந்தியொன்றை அனுப்பியுள்ளார். அமைச்சர் விரைவில் சுகமடையவேண்டுமென்றும் அவர் தந்தியில் கேட்டுள்ளார்.

......

கொழும்பு மாநகரசபை

### சிங்களத்தில் நிர்வாகம்

கொழும்பு, சனி

அடுத்த மாதத்திலிருந்து கொழும்பு மாநகரசபை உபவிதிகள் சிங்களத்தில் வெளியிடப்பட விருக்கிறது. இதனல் கொழும்பு மாநகர சபை கருமங்கள் தனிச் சிங்களத்தில் நடைபெறும் என்று மாநகரசபை முதல்வர் வின்சென்ட் பெரேரா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்வார்.

(சி. பி. ஏ.)

......

### ராஜினமா

புங்குடுதீவு, சனி

அகில இலங்கை இந்துமாமன்ற புங்குடுதீவுக் கிளைத் தனதிகாரி பதவியிலிருந்து அ.இ. கயரோக நிவாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தை ஆதரித்து 51 நாடுகளும் அனுமதிப்பதை

பிரதிநிதி கூறினார்.

பரிதவிப்போர்க்கும் பிறவாறுபாதிக்கப்பட்டோர்க்குமாக அவர்தம் இவ்வவல வேளையில் எம் இதயங்கள் வேதனையுறுக்கின்றன.''

# புதிய ஆண்டில் இடமாற்றம் பெறும் டாக்டர்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் பாணக்குடா நாட்டிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் அப்போதிக்கரிமார்களும் பதிவு டாக்டர்களும் (ஆர். எம்.பி.-ஏ,எம். பி.) வருகிற ஜனவரி மாதம் முதல்பொது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இங்கிருந்து வெளிமாகாணங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளவர்கள் விபரம் வருமாறு:

என் விஸ்வநாதன் உடுவிலிலிருந்து கோட்டை முனைக்கும், வீ நாகமணி பண்டத்தரிப்பிலிருந்து கற்றனுக்கும், ஆர் சோமசுந்தரம் இணுவிலிருந்து கலேன்பிந்துனுவெவவுக்கும், பீ சின்னத்தம்பி கொக்குவிலிருந்து இறயகமவுக்கும், பீ முருகேசு பருத்தித்துறையிலிருந்து அவுத்த நாயகம கொடவுக்கும், எஸ். கந்தையா சாவகச்சேரியிலிருந்து கடுவெலவுக்கு கே நல்லலிங்கம் யாழ்ப்பாணத்திலிருந்து திருமலைக்கும், இ நன்னித்தம்பி புன்னாலைக்கட்டுவனிலிருந்து வவுனியாவுக்கும், எஸ் எஸ் சோமசுந்தரம் கோண்டாவிலிருந்து திவில்லவுக்கும், வீ எஸ்ஏகாம்பரம் அளவெட்டியிலிருந்து நாவகத்தேகமவுக்கும், இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இடமாற்றம் பெறுவோர் செல்லும் இடங்கள் விபரம் வருமாறு:

பீ ஏ கந்தசாமி ஏழாலை பெரியமுள்ளிமலை, எம் செல்வச்சந்திரன் யாழ்ப்பாணம் - அனுராதபுரம், எஸ் வல்லிபுரம் வதிரி-அயகம, கே திருச்செல்வம் ஆனையிறவு -நவதன்வத்தை, கே கணபதிப்பிள்ளை மந்தை-குணுப்பிட்டிய ஆர் மயில்வாகனம் மிருசுவில்-கஃட்டஸ்திஒயா,. ஏ தங்கராசா மயிலிட்டி-ஆளவெல, ஆர் கனகசபாபதி ஊர்காவற்றுறை-கலகெதற எஸ் நாகேந்திரன் உரும்பிராய் - அனுராதபுரம், எஸ் செல்வரட்ணம் செம்பியன் பற்று-தம்புல்ல, சீ செல்வப்பிரகாசம் கிளிநொச்சி-மந்தூர், ஜே வரதராசன் அக்கராயன்குளம் - கல்முறுவ, சீ ராஜரட்ணம் புங்குடுதீவு - கல்பிட்டிய, ஏ கதிரேசன்பிள்ளை துணுக்காய்-ஒவுலுகந்த, எஸ் பாலசுப்பிரமணியம் அனலைதீவு-புத்தளம், கே நல்லையா கைதடி - கொட்டுக்கச்சி, பீ சிவஞானசுந்தரம் கண்டாவளை - பெரியகிண்ணியா, என் டி மூர்த்தி தொல்புரம் கம்மடுவ, கே எஸ் செல்லத்துரை நெடுந்தீவு-காகல்லவ, டி சிவானந்தன் பளை-சாய்ந்தமருது, எஸ் இராஜேந்திரன் கோப்பாய்-இரிபிட்டிய, கே சின்னையா மிருசுவில்-தம்புல்ல, எஸ் குணரட்ணம் அம்பன்-திரியாய், வீ கனகரட்ணம் வட்டுக்கோட்டை-பதுளை, என் பாலசுப்பிரமணியம் சங்கானை-குருநுவல, என் சற்குணலிங்கம் பூனகரி-தகட்டருப்பே, டி திருநாவுக்கரசு இரணைதீவு - கொலன்கொட, சீ பீ தியாகராசா தர்மபுரம் ரத்தாவானவ, எஸ் பாலசுப்பிரமணியம் ஊர்காவற்துறை-பொத்துப்பிட்டியாவ, சீ யோகராசா வட்டுக்கோட்டை - புசல்லாவை, வீ மகாலிங்கம் முள்ளியான்-பதவியா, பீ கனகசுந்தரம் கோப்பாய்-பொல்கவலை, வீ சிவராசா பண்டத்தரிப்பு - அக்குறணை, கே செந்தில்நாதன் வல்வெட்டித்துறை-தெனியாய், என் சங்கரப்பிள்ளை சாவகச்சேரி-கலனியா, சீ செல்வத்தம்பி பளை-மிகதன்ன, எஸ் பத்மராசா ஊர்காவற்துறை-பாணம, எஸ் சத்தியசீலன் செம்பியன்பற்று-தொளஸ்பாகே, எஸ் இராஜலிங்கம் மந்திகை-இரத்தினபுரி, ஜே வின்ஸ்லோ காங்கேசன்துறை - அங்கோடை, எஸ் பாலச்சந்திரன் காங்கேசன்துறை - அங்கோடை, இ கந்தையா காங்கேசன்துறை-தாவலப்பிட்டி, எஸ் கிருஷ்ணானந்ததேவன் பூனகரி தலவத்ஓயா, டி குமாரசாமி கிளிநொச்சி-வாளைச்சேனை, வீ எஸ் வல்லிபுரம் நயினாதீவு-ருகம,

## இங்கு வருவோர்

வெளியிடங்களிலிருந்து வடபகுதிக்கு இடமாற்றமாகி வருவோர் விபரம் வருமாறு:

எம் இராமநாதன் கைதடி, பீ மயில்வாகனம் காங்கேசன்துறை, எம் இராசமாணிக்கம் பருத்தித்துறை, கே சிவராசா தர்மபுரம், கே சுந்தரலிங்கம் ஊர்காவற்றுறை, எஸ் கதிரவேலு புங்குடுதீவு, கே ஏரம்பு கண்டாவளை, ஏ விசயரட்ணம் பளை, இ மயில்வாகனம் யாழ்ப்பாணம் பீ ஆரோக்கியநாதர் பண்டத்தரிப்பு, எஸ் சிவபாலேந்திரராசா ஊர்காவற்றுறை, டி எஸ் லோகநாதன் உடுவில், எஸ் நடராசா வட்டுக்கோட்டை, எஸ் கணேசலிங்கம் பண்டத்தரிப்பு, எஸ் சபாரட்ணம் அளவெட்டி, எம் சின்னத்துரை பளை, டி திருஞானசம்பந்தர் நயினாதீவு, கே விவேகானந்தன் பூனகரி, எஸ் விவேகானந்தன் முள்ளியான் கே அம்பலவாணர் செம்பியன்பற்று, பீ நாராயணசாமி அம்பன், கே சோமசுந்தரம் யாழ்ப்பாணம், சீ இராசதுரை வரணி, ஆர் தர்மலிங்கம் ஊர்காவற்றுறை, எஸ் கனகரட்ணம் ஆனையிறவு. எஸ் மாணிக்கலிங்கம் கிளிநொச்சி, ஏ குணரட்ணம் இரணைதீவு, எஸ் முருகேசு புன்னாலைக்கட்டுவன் ஏஸ் இரட்ணம், மந்திகை, கே பரமநாதன் வல்வெட்டித்துறை, சீ சின்னப்பாபிள்ளை இணுவில், வீ ஒ கனகசிங்கம் கொக்குவில், எஸ் பாலச்சந்திரன் சங்கானை, என் செல்வரட்ணம் யாழ்ப்பாணம், கே தாமோதரம் பிள்ளை உரும்பிராய், வி செல்வத்துரை கோப்பாய், வீ கணபதிப்பிள்ளை தொல்புரம், ஏ செல்வராசா மிருசுவில், எம் கனகசிங்கம் ஊர்காவற்றுறை, பீ விவேகானந்தன் கைதடி, எஸ் டி கந்தையா பூனகரி.

வீ வல்லிபுரம் சாவகச்சேரி, வீ கந்தசாமி கோப்பாய், எம் குணரட்ணம் அக்கராயன்குளம், வீ தங்கராசா அனலைதீவு, கே கனகசபை வட்டுக்கோட்டை, என் நாகேந்திரராசா (மிருசுவில்) டி அப்புத்துரை கோண்டாவில், எஸ் பஞ்சலிங்கம் கிளிநொச்சி, எஸ் வேலாயுதம் மல்லாவி, என் ஏ டி பொன்னுச்சாமி செம்பியன் பற்று, எஸ் கந்தசாமி மயிலிட்டி, எஸ் கே சுப்பிரமணியம் துணுக்காய், எஸ் கனகரட்ணம் ஏழாலை.

(அம்ப. நிரு.)

குறிப்பாக பொலிஸ் இலாகாவில், சாதாரண மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய சிங்களத்தில் அவர்களின் [illegible]க்குமூலங்களைப் பதியவேண்டுமென்று பிரதமர் தெளிவுபடுத்தியுள்ளார்

முன்னைய அரசாங்கம் முப்படைகளிலும் நூற்றுக்கு நூறு வீதம் ஆங்கிலத்தையே பயன்படுத்தியிருப்பது அதிகாரிகளால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாம். இவைபற்றி ஆராய்ந்து அறிந்தபின்னர் பிரதமர் மேற்படி நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்.

இதன்படி இனிமேல் சகல அரசாங்க பணிகளும் சிங்களத்திலேயே முப்படைகளிலும் பொலிஸ் இலாகாவிலும் நடைபெறும் இதற்கு தகுதியான சிங்களம் தெரிந்த அதிகாரிகள்தேவையானால் நியமிக்கப்படுவார்கள். பொதுமக்களுடன் தொடர்புகள், விசாரணைகள், அறிக்கைகள், சாட்சியங்களைப் பதிதல், குற்றப்பத்திரிகை தயாரித்தல் போன்றவை யாவும் சிங்களத்தில் நடைபெறும்.

மேலும் பொதுமக்கள் புகார்கள் செய்யவோ வேறு காரணங்களுக்காகவோ, பொலிஸ்நிலையங்களுக்கு அல்லது முப்படை முகாம்களுக்கு சென்றால் அமர்வதற்கு இதுவரை காலமும் இருந்துவந்த வாங்குகளை அப்புறப்படுத்திவிட்டு

பூநகரியில் முந்திரிகை செய்கைபண்ணுவதற்கான சாத்தியங்கள்பற்றித்தோட்டத்தொழிலமைச்சு பரிசோதனை செய்துவருகிறதுஎன்று தோட்டத்தொழில் அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர், டி சில்வா இன்று ஆட்சிமன்றத்தில் தெரிவித்தார்

அவர் மேலும் கூறியதாவது: முந்திரிகைச் செய்கைக்கு மிகச் சிறந்த மண்வளம் பூநகரிப்பகுதியில் இருக்கிறது ஆனால் தண்ணீர் தட்டுப்பாடு பெரும் பிரச்னை இதுபற்றி பனம்பொருள் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் பேராசிரியர் திரு குலரத்தினத்துடன் கலந்தாலோசனை

யில் நிலத்துககடியில் நிறையநீர்இருப்பதாக அவர் உறுதியளித்தார் இந்த நீரைப் பயன்படுத்துவது சாத்தியமானால் பூநகரிப் பகுதியில் சுமார் நாலாயிரம் ஏக்கர் நிலத்தை இலாபகர முறையில்விருத்திசெய்ய முடியும்.

சி பி ஏ

## யாழ். ஆஸ்பத்திரி மதியுரைக் குழு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி மதியுரைக்குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்

தலைவர்: என். பத்மநாதன், காரியதரிசி: எஸ் சீவரத்தினம், நிர்வாகசபை: பி. வேலுப்பிள்ளை, பி. சந்தியாபிள்ளை. ஆர். இராசேந்திரம், ரி. எல். பாலரட்ணம், திருமதி வி. லோகநாயகி, வி. வல்லிபுரநாதன், ஆர். பிக்சன், எஸ். பாலசுப்பிரமணியம்.

......

## பொலிஸ் நேர்முகப் பரீட்சை

உடுப்பிட்டி, சனி

பொலிஸ் கான்ஸ்டபிள் வேலைக்குஇப்பகுதியிலிருந்து விண்ணப் பித்தவர்களுக்கு அனுராதபுரத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் யாழ்ப்பாணத்தில் நேர்முகப்பரீட்சை நடக்குமென்றும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்றும் சிலருக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டது. மற்றவர்களுக்கு மறுஅறிவித்தல் இதுவரை கிடைக்காததால் தமது நிலை தெரியாது திண்டாட்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

## 'கோப்பாய் மத்தியில் அமைக்கவும்''

யாழ்ப்பாணம், ஞாயிறு

கூட்டுறவுச் சமாஜங்களின் புனரமைப்பின்கீழ் நிறுவப்படவிருக்கும் கோப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சமாஜத்தை கோப்பாய் வாழ் மக்களின் நன்மை கருதி கோப்பாய் மத்தியில் நிறுவுமாறு கேட்டு கோப்பாய் தெற்குப்பகுதியைச் சேர்ந்த 10 வட்டாரங்களையும் சேர்ந்த மக்கள் கூட்டுறவு ஆணையாளருக்கு மகஜர் அனுப்பியுள்ளனர்

......

## முருங்கன் கொலை மர்மம்

மன்னார், சனி

முருங்கன் வர்த்தகர் மர்மக்கொலை சம்பந்தமாக தீவிர புலன்விசாரணைகளை நடாத்திவரும் பொலிஸார் நேற்று முக்கிய சாட்சியொருவரின், வாக்குமூலத்தை பதிவுசெய்தனர். மற்றும் சிலரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இருவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவ்விசாரணையிலிருந்து சில தகவல்கள் கிடைத்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்து சமுத்திரத்தில்

## யு. எஸ். - பிரிட்டன் ஆக்கிரமிப்பு முயற்சி?

### பிரவ்டா கண்டனம்

மாஸ்கோ, நவ. 20

இந்துமா சமுத்திரத்தில் அமெரிக்காவும் பிரிட்டனும் ஆக்கிரமிப்பு செய்ய முற்படுவதாக சோவியத் பத்திரிகையான பிராவ்டா கண்டனம் தெரிவித்துள்ளது

இந்துமா சமுத்திரத்தில் சோவியத் யூனியன் கடற்படை பலம் பெற்றிருப்பதாகக் கூறிக்கொண்டு அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டாக கடற்படைத்தளத்தை அமைப்பதற்கு முயற்சிகள் செய்கின்றன. இது தங்கள் நடவடிக்கைகளை நியாயமானவை என்று நிரூபிப்பதற்காகவேயன்றி வேறல்ல என்று அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து ஆயிரம் கிலோமீற்றர் தென்கிழக்கே உள்ள தீவொன்றில் இக் கடற்படைத் தளத்தை அவர்கள் அமைக்கவிருக்கின்றார்கள்! அணு சக்தியில் இயங்கும் நீர் மூழ்கிக் கப்பல்களுக்குரிய தளமாக இது இருக்குமென்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்துமா சமுத்திரத்தில் வல்லரசுகள் கடற்படைத் தளம் அமைப்பதுபற்றி இந்தியா கவலை கொண்டிருப்பதாக லோகசபையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சர்தார் சுவர்ண் சிங் தெரிவித்திருந்தார்.

கலாசாலைச் சாரணரால் நடாத்தப்பட்ட இவ்விழாவில் கலாசாலை அதிபர் திரு. எட்வேட் முதல் மரத்தைச் சம்பிரதாய முறைப்படி நாட்டினார்.

......

## 55 வயது ஓய்வுக் கடிதம்

கொடிகாமம், சனி

வடபகுதியிலுள்ள55 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கு வடமாநிலக்கல்வி அதிகாரி திரு வெ. சங்கரலிங்கம் இளைப்பாறுதல் பத்திரங்களை அனுப்பியுள்ளார். இளைப்பாறும் தலைமையாசிரியர்களை, சிரேஷ்ட உதவியாசிரியர்களிடம் பொறுப்பை ஒப்படைக்குமாறு அவர் பணித்துள்ளார்.

மன்ற புங்குடுதீவுக் கிளைத் தனாதிகாரி பதவியிலிருந்து அ.இ. கயரோக நிவாரண தேசிய சங்கக்கிளை காரியதரிசி, தனாதிகாரி பதவியிலிருந்து இம்மாதம் 30ம் திகதி தாம் விலகிக் கொள்வதாக திரு. ச. கந்தப்பிள்ளை அறிவித்தல் கொடுத்துள்ளார். பொதுச் சேவையில் பற்றுள்ள இளைஞர்களுக்கு வாய்ப்பளிக்குமுகமாகவே பிரஸ்தாப பதவிகளிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக அவர் அறிக்கைமூலம் தெரிவித்துள்ளார், மற்றும் நான்கு பொது நிறுவனங்களில்தாம் வகித்துவரும் பதவிகளையும் ராஜினாமா செய்யப் போவதாக இவர் அறிவித்துள்ளார்.

## நீல் ஆம்ஸ்ட்ரோங் புதுடில்லி வந்தார்

### இன்றுசர்வதேசவிமான இயல்மாநாடு

புதுடில்லி, நவ 21

சர்வதேச விமான இயல் மாநாடு நாளையதினம் புதுடில்லியில் ஆரம்பமாகின்றது. ஆசிய நாடொன்றில் இம்மாநாடு நடைபெறுவது இதுவே முதல்தடவை.

இந்த மாநாட்டில் 84 நாடுகளைச் சேர்ந்த 120 பிரதிநிதிகள் கலந்துகொள்ளுகிறார்கள். இதில் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்களும் நான்கு சோவியத் விண்வெளி வீரர்களும் கலந்துகொள்கிறார்கள். சந்திரனில் முதன்முதல் காலடி எடுத்துவைத்த நீல் ஆம்ஸ்ட்ரோங்கும். அப்பலோ-12ல் சந்திரனை அடைந்த கோஷ்டியின் தலைமை விமானி சார்ள்ஸ் கொன்ராடும்இதில் கலந்துகொள்கிறார்கள். அமெரிக்க, சோவியத் விண்வெளி வீரர்களுக்கு இந்திய ஜனாதிபதி விருதுகள் வழங்கி கௌரவிக்கவிருக்கிறார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஏற்கனவே புதுடில்லி வந்து சேர்ந்துள்ளனர்.


## மொடேர்ன் தீபாவளி வாழ்த்து! பரிசுத்திட்ட முடிவு

மொடேர்ன் பரிசுத்திட்ட முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு — C 4947

2-ம் பரிசு — D 3935

3-ம் பரிசு — C 931

தவிர்க்க முடியாத காரணங்களால் குறிப்பிட்ட திகதிகளில் மேற்படி முடிவை வெளியிட தாமதமாகிவிட்டது. உங்கள் பரிசுக் கூப்பன்களை 30-11-70க்கு முன்னர் எங்கள் ஸ்தாபனத்தில் ஒப்படைத்து பரிசுகளைப் பெற்றுக் கொள்ளும்வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

### மொடேர்ன் பேணிச்சர்

79/2, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்.

போன்: 7364


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் நாம் எக்காலத்திலும் கடவுளை வழிபடல்வேண்டும். — நாவலர்.


ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
P. O. Box: 49, Jaffna: Telephone: 689.

சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 7-ம் திகதி (22-11-70)


## பொலிசும் இராணுவமும்

தமிழ்ப் பகுதிகளுக்குத் தமிழ்தெரிந்த பொலிசாரை அனுப்பவேண்டுமென்றும் வடபகுதியிலிருந்து இராணுவத்தினரைத் திருப்பி அழைத்துக்கொண்டு கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகியவைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை பொலிசாரிடமும் சுங்கப் பகுதியினரிடமும் ஒப்படைக்கலாமென்றும் அப்படித்தான் இராணுவத்தினர் அங்கு இருக்கவேண்டுமென்றால் அவர்களை இலகுவில் அடையாளம் கண்டுகொள்வதற்காக பொலிசாருக்குள்ளது போல் இலக்கம் அல்லது அடையாளம் எதுவும் வழங்கப்பட வேண்டுமென்றும் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு க. ஜெயக்கொடியும் ஆட்சிமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் அம்சம் அம்சமாகப் பரிசீலனை செய்யப்படுகையில் பொலிஸ், இராணுவச் செலவினம் மீது பேசுகையில் அரசாங்கத்துக்கு யோசனை தெரிவித்திருக்கின்றனர். வடக்கில் இருந்து இராணுவத்தைத் திருப்பி அழைக்கப்போவதில்லையென்றும் இதற்கு மாறாக அங்கு இராணுவ பலம் அதிகரிக்கப்படுமென்றும் பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சரும் பிரதமரும் தெரிவித்துள்ளனர். ஆனாலும் வடபகுதி சம்பந்தமாக பொலிஸ், இராணுவத்தின் கடமைகள் பற்றியும் தமிழ் தெரிந்த பொலிசாரை இங்கு அனுப்ப வேண்டுமென்றும் இராணுவத்தை திருப்பிஅழைக்க வேண்டும் அல்லது அவர்களை இலகுவாக அடையாளங்காண வகைசெய்யவேண்டும் என்ற கோரிக்கைபற்றியும் ஆராய்வதும் அதை ஆளும் கட்சியினரின் கவனத்துக்குக் கொண்டுவருவதும் அவசியமாகும்.

காக ஏற்பட்டது தான்'' என்பதை காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர் டி பண்டாரநாயகாவே ஒரு சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். முறைப்பாடு செய்பவரின் பாஷையைப் புரிந்துகொள்ள முடியாத ஒரு பொலிஸ்காரர் எப்படிக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனைபெற்றுக் கொடுக்க முடியும்?

எனவே தமிழ் தெரிந்த பொலிஸ்காரரை அவர்கள் எந்த இனத்தை, மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் அவர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புவதுதான் நியாயமாகும். குறிப்பாகப் பாதுகாப்புச் சேவையிலும் பொதுவாக அரசாங்க சேவையிலும் சேர்பவர்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனை இருந்தால் மக்களுக்கும் தொல்லையில்லை; அந்தச் சேவையிலுள்ளவர்களுக்கும் சங்கடமில்லை; நாட்டின் நிர்வாகமும் சீராக நடைபெறும். நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் அமைதியும் நிலவும்.

இது அரசியலுக்கு அப்பாற்பட்ட தேசியப் பிரச்னை.

வடபகுதி இராணுவத்தை அகற்றவேண்டுமென்ற கோரிக்கைக்கு அடிப்படைக் காரணம், எந்த நோக்கத்துக்காக இராணுவத்தினர் இங்கு அனுப்பப்பட்டார்களோ அந்த நோக்கத்தை விட அவர்கள் வேறு நோக்கத்துடன் நடந்துகொண்டிருப்பதுதான்.

வடபகுதிக்கு இராணுவத்தினர் அனுப்பப்பட்ட பின்னர் எத்தனை சட்டவிரோதக் குடியேற்றக்காரரை அவர்கள் கைதுசெய்திருக்கின்றனர்; எத்தனை கள்ளக்கடத்தலைக் கண்டுபிடித்துத்

# 'இந்தியாமீதுபடையெடுப்புஆபத்து'

## ஆச்சாரிய- விநோபாபாவே எச்சரிக்கை

அமெரிக்காவும் புதுசீனமும் பாகிஸ்தானுக்குப் போட்டாபோட்டியுடன் ஆயுத உதவிகளைச் செய்து வருகின்றன. பாகிஸ்தானுக்கு உதவிகள் அளித்து அதைத் தன்வசம் ஆக்கிக்கொள்ள புதுசீனம் முயலுவதாகவும் அந்த முயற்சி வெற்றி பெறாமல் தடுக்கவே தாங்கள் ஆயுத உதவிகளை பாகிஸ்தானுக்கு அளிப்பதாகவும் அமெரிக்கா இந்தியாவிடம் காரணம் கூறியது. இது உண்மையாயின் அமெரிக்காவின் இந்தமுயற்சி வெற்றி பெற்றதாகக் கூறுவதற்கில்லை. ஏன்?

பாகிஸ்தானின் ஜனாதிபதி யாஹியாகானுக்கு பீகிங்கிலே கிடைத்துள்ள அமோகமான வரவேற்பும், எல்லா உதவிகளையும் பாகிஸ்தானுக்கு அளிக்க புதுசீனம் உறுதி கூறி இரு நாடுகளின் உறவுகளும் என்றென்றும் பலமாக இருக்குமென்றும் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா அளிக்கும் ஆயுத உதவிகளைக் கண்டு, புதுசீனத்துடன் தன் உறவை பாகிஸ்தான் தளர்த்திக்கொள்ளவில்லை. இதற்கு மாறாக அமெரிக்காவும், புதுசீனமும் அளிக்கும் ஆயுதங்களை இரு கைகளாலும் வாங்கிக்கொள்ளுகின்றது. ரஷ்யாவும் அதற்கு ஆயுதங்களை அளிக்கின்றது. அம்மூன்று வல்லரசுகளுக்குள்ளும் அதாவது அமெரிக்கா, ரஷ்யா, புதுசீனம் இவற்றுக்குள் எவ்வளவு கருத்து வேற்றுமைகள் இருப்பினும், இம்மூன்றும் பாகிஸ்தானுக்கு ஆயுத பொருளாதார உதவிகளை அளிக்கும் விஷயத்தில் ஒன்றுபட்டுள்ளன. பாகிஸ்தானுக்கு இது பெரிய ராஜதந்திர வெற்றி.

கம்யூனிஸ வல்லரசுகளின் ஆதிக்கம் பரவாமல் தடுக்கவே அமெரிக்கா ஆயுத உதவிகளை பாகிஸ்தானுக்குத் தருவதாக முன்னர் கூறப்பட்டது. ஆனால் கம்யூனிஸ்ட் நாடுகளான புதுசீனம், ரஷ்யா இவற்றுடன் மிகவும் நட்புடன் இருந்து அவற்றின் ஆயுத உதவிகளையும் பாகிஸ்தான் பெருமளவில் பெற்று வருவது அமெரிக்காவுக்குத் தெரிந்தே இருக்கவேண்டும்.

குவிய யுத்த ஆபத்து தான் அதிகரிக்கும். இந்தியாவுக்கு ஈடு செய்ய பிரிட்டனை அமெரிக்க கேட்டுள்ளதாம்! இந்தியாவுக்கு ஆயுத சப்ளை செய்ய பிரிட்டன் முன்வருமா? என்பது தெரியவில்லை. இது எப்படியாயினும் பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் ஆயுதங்கள் குவிவது யுத்த ஆபத்தை அதிகரிப்பதாகவே இருக்கும். மேற்குறித்த மூன்று வல்லரசுகளுக்கும் இது தெரியாதிருக்க முடியாது. சண்டை இப்பகுதியில் வெடிப்பதாயின் அதனால் இப்பகுதி மக்கள் எவ்வளவு கஷ்டங்களுக்கு உள்ளாவர் என்பது ஒரு புறமிருக்க மிகப் பாடுபட்டுப் பெற்ற சுதந்திரத்தையும் இழக்கக்கூடிய ஆபத்து ஏற்படுவதாக இருக்கும்.

0 0 0

''எதிர்வரும் ஆபத்து'' என்ற தலைப்பிலே 'பவன்ஸ் ஜர்னல்' என்ற பம்பாய் சஞ்சிகையில் ஆசார்ய விநோபாபாவே எச்சரித்திருக்கிறார். 'இந்தியாமீது வெளிநாட்டுப் படையெடுப்பு ஏற்படலாம் எந்த இடத்தில் தாக்குதல் ஏற்படுமென்பதையும் நான் தெளிவாகக் காணக்கூடியதாகவுள்ளது. இந்தியாவின் வடகிழக்கு மூலையிலேதான் தாக்குதல் நடக்கும். வடக்சிலிருந்து சீனம்தாக்கும் தெற்கிலிருந்து பாகிஸ்தான் தாக்கும், வங்காளத்தில் உள்நாட்டுப்புரட்சிஏற்படும் இதனால் அசாம்துண்டிக்கப்பட்டுவிடும். பிரம்மபுத்திராவுக்கு வடக்கிலுள்ள பகுதியை சீனமும், தென்பகுதியை பாகிஸ்தானும் சேர்த்துக் கொள்ளும். எழுத்தில்திட்டமாக இல்லாவிட்டாலும், என்கண்களுக்கு இது தெளிவாகத்தெரிகிறது. வெளியிலிருந்து தாக்குதல் அநேகமாக ஏற்படப்போகிறது இந்தியாவின் சுதந்திரத்துக்குப்பெரும் ஆபத்துஏற்பட்டுள்ளது' என்று விநோபாபாவே எச்சரித்துள்ளார், கிராமதான மூலமே இந்த ஆபத்தைத் தவிர்க்கமுடியுமென்றும், வன்முறைச் செயல்களால் நிலைமைமோசமாகுமேயன்றி எவ்வித நன்மையும் எற்படாதென்றும் தவக்கமின்றி அகிம்சாமுறையில் கிராமதான புரட்சியை ஏற்படுத்தவேண்டுமென்றும் வாலிபர்களை அவர் கேட்டுள்ளார். ஆனல் அவர் யோசனை பலாத்காரத்தில் இறங்கியுள்ள படித்த வாலிபர்களின்செவிகளில் ஏறுமா?

இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள இப்பெரும் சோதனையும் ஆபத்தும் எப்படி தீரப்போகிறது? நாட்டின் சுதந்திரத்துக்கும் அமைதிக்கும் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கும்இச்சமயத்திலும் அரசியல் கட்சித் தலைவர்கள். 1972-ம் வருட தேர்தல் போராட்டத்தில் எவ்விதம் வெற்றிபெறலாமென்பதிலேயே கவனம் செலுத்துகிறார்கள். நாட்டுக்கு வந்துள்ள ஆபத்தைஉணர்ந்து தலைவர்கள் தேசாபிமானத்துடன் ஒன்றுபட்டு, தேசிய அரசாங்கத்தை அமைத்து ஒத்துழைக்க முன்வந்தாலே உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டவும் வெளிநாடுகளுக்கு இந்தியா மீது மீண்டும் மதிப்பு ஏற்படவும் தாக்குதல் ஆபத்து குறையவும் முடியும். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'

— பராசரன் —

கொழும்பு

## பல்கலைக்கழக மாணவரும் வேலைநிறுத்தபயமுறுத்தல்?

கொழும்பு, சனி

கட்டுப்பத்தை விவகாரம் குறித்தும், பல்கலைக்கழக பொறியியல் துறைமாணவர்கள் அனுமதி குறித்தும் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பதற்கான முஸ்தீப்புகளை செய்து வருவதாகத் தெரிகிறது

கட்டுப்பெத்தை பல்கலைக்கழக மாணவர்களின் வேலைநிறுத்தம் தீர்ப்பதற்கான நடவடிக்கையை கல்வி அமைச்சு உடனடியாகமேற்கொள்ளவேண்டும் என்றும் பொறியியல்துறையில் நடைபெற்ற அனுமதியில் உள்ள பாரபட்சததிற்கு உடனடியாக நல்ல தீர்வு காணப்படவேண்டுமென்றும் மாணவர் சங்கப்பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார்

இப்பிரச்னையைத் தீர்க்க கல்வி அமைச்சு தவறுமாயின் கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிப்பார்கள் என்று அவர்சொன்னுர்.

ஏற்கனவே கட்டுப்பெத்தை பல்கலைக்கழக மாணவருக்கு அனுசரணையாக அம்பாறை காடி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள்வேலைநிறுத்தத்தில் குதித்திருந்த போதும் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் அடையாள வேலைநிறுத்தத்தில்ஈடுபட்டதும் தெரிந்ததே,

## மனுதாரின் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறவில்லை அவரது வாக்குமூலத்தின் அப்பகுதி உண்மையானதல்ல. பட்டினசபைத் தலைவர் பி சம்சுதீன் பரம்பரைமீன் வர்த்தகரல்ல ஆதலால் அவரது கேள்வியை ஏற்றுக் கொள்ளவியலாதுஎனத் தெரிவித்தார் என்பதையும் இவரது தீர்மானத்துக்குப் பின்னரே ஏகமனதாக இந்த இறைச்சிக் கடை பற்றித் தீர்மானிக்கப்பட்டதாவும் காரியதரிசி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். எனவே பிரபு நீங்கள் இந்த கேள்வியில் பரம்பரை வர்த்தகம் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லையென்பதைக் காணலாம். இந்தமனிதர்கடையை சும்சுதீனுக்குக் கொடுக்கர்தற்கு பொய்யான காரணங்களைக்கூறிவிட்டு அதை ஜய்னலப்தீனுக்குக் கொடுத்துள்ளார். இதேபோன்றே நகரமண்டபத்தைக் குத்தகைக்கு விடும்விடயத்திலும் பொய்யான வாக்குமூலத்தையே யளித்துள்ளார். எனவே இவரது வாக்குமூலத்தை எவரும் நம்பலாமா? இவர் ஒரு உண்மைபேசும் மனிதரல்ல.

அடுத்து காசோலையைத் திருப்பிக்கொடுத்தது பற்றி சபைத்தலைவரது கவனத்துக்குக் கொண்டுவந்ததாக காரியதரிசி விளக்கமாகக் கூறியுள்ளார் ஆனல் தலைவர் தனக்கு ஞாபகமில்லை எனக் குறிப்பிடுகிறார். எனவே இவர் ஞாபகம் இல்லை எனக்கூறுவது பொய்யானது என நான் கூறுகிறேன்.

மேல்விசாரணை இம்மாதம் 29-ம் தேதி கொழும்பு தேர்தல் நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெறும்.

## லெபனுனுக்கு பிரதமர் வாழ்த்து

கோட்டை, ஞாயிறு

இன்று லெபனுன் தேசிய தினத்தை முன்னிட்டு பிரதமர்திருமதிசிறிமாவோ பண்டாரநாயகா லெபனுன் ஜனுதிபதிக்கு வாழ்த்துச் செய்தி யொன்றை அனுப்பிவைத்துள்ளார்,

## களவு

சாய்ந்தமருது, சனி

கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த சாய்ந்தமருது 5-ம் குறிச்சி பிரதான வீதியில் நிறுவப்பட்டுள்ள மக்கள் கடையில் சுமார் 1500 ரூபா பெறுமதி வாய்ந்த சிகரெட், பீடி வகைகள் களவாடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இக் களவை அடுத்து மேற்படி கடை மனேஜரும் காசாளரும் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

## ஆட்சி மன்றத்திலே ...

நமது நிருபர் பெரி சுந்தரலிங்கம்

# 'பொலிசாருக்கு எம். பி.க்களின் "பொல்லடியும்" பூமாலையும்'

எந்த ஆண்டு வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போதும், பொலிஸ், இராணுவம் ஆகியவற்றின் மான்யங்களின் மீது ஏராளமான உறுப்பினர்கள் பேசுவார்கள், குறிப்பாக தேர்தல் நடைபெற்று, ஆட்சி மன்றம் ஏற்பட்டு, முதலாவது வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது, முன்னைய ஆட்சியாளரின் பதவிக்காலத்தில் பொலிசுத் துறையினர் [illegible]ரட்டுத்தனமாக, மிலேச்சத்தனமாக, சட்டவிரோதமாக, காட்டுமிராண்டித்தனமாக நடந்து [illegible] கள்'' என்[illegible] குற்றச்சாட்டுகள் சர்வசா

குறைபாடுகளை எடுத்துக் கூறுபவர்களுக்காகப் பரிந்து பேச. திரு. பெர்னுட் சொய்சா முன் நின்ருர்; மூன்ருவது பிரிவு திரு ஜே. ஆர். தலைமையில் இயங்கியது.

'நாய் வாலை நிமிர்த்தினுலும் நிமிர்த்தலாம், போலீசார் காட்டுமிராண்டித் தர்பார் நடத்துவதைத் தடை செய்ய முடியாது' என்று ஆரம்பித்த காலிப் பிரதிநிதி தகாநாயக்கா, கி[illegible]கால் லைத் தோட்டத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைச் சுட்[illegible]டி, அங்கு போலீசார் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி

கூட எல்லாரும் சட்டப்படி நடந்து கொள்பவர்கள் அல்ல; பிறவியிலேயே குற்றவாளிகலாகஉள்ளவர்களும் இருக்கத்தான் செய்கிருர்கள் எனவே அவர்களைப் போன்றவர்களைத் தண்டிக்கவும், கட்டுப்படுத்தவும் தக்க அதிகாரம் உடைய பொலிசுப்படை தேவைதான்'

'எந்த நாட்டிலும், எந்த அரசும் போலீசாரினதும், இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் பலத்தில்தான் தங்கியிருக்கிறது. எனவே நாட்டைக்காக்க, அரசைக்காக்கப் பாடுபடும் அவர்களைக் கண்டபடி கண்ட இடங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமமான்

யினரின் கவனத்துக்குக் கொண்டுவருவதும் அவசிய மாகும்.

தமிழ்ப்பகுதிகளுக்கு அதாவது தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இடங்களுக்கு தமிழ் தெரிந்த பொலிசாரை அனுப்பவேண்டுமென்பதே கோரிக்கை, தமிழ்ப் பொலிசாரை அனுப்பவேண்டுமென்று கோரப்படவில்லை. சிங்களம் மட்டுமே தெரிந்த சிங்களம் பேசும் மக்களே பெரும்பான்மையினராக வாழும் இடங்களுக்கு தமிழ் மட்டுமே தெரிந்த பொலிசாரை அனுப்பினால் நிலைமை எப்படியிருக்கும்? தமிழ்ப் பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரியாத பொலிசார் கடமையாற்றும்பொழுது தமிழ் தவிர வேறு எந்தமொழியும் தெரியாத ஒருவர் முறைப்பாடுசெய்யச் சென்றால் அந்த முறைப்பாட்டை அந்தப் பொலிஸ்காரர் எப்படி புரிந்துகொள்வார்; எப்படி அதைப் பதிவுசெய்வார்? சரியாகப் புரிந்துகொள்ளாமல் முறைப்பாடுகளும் வாக்குமூலங்களும் பதிவுசெய்ததன் விளைவாக குற்றவாளிகள் தப்பிவிட ஏதுவாகிறதென்றும் நீதி வழங்க முடியாது போய்விடுகிறதென்றும் பல வழக்குகளில் உயர்நீதிமன்ற நீதியரசர்களே சுட்டிக்காட்டியிருக்கின்றனர். நீதி பொய்த்துவிட மொழியே காரணமாக இருக்கலாமா? ''பாஷை என்பது ஒருவரை ஒருவர் புரிந்துகொள்வதற்

அவர்கள் கைதுசெய்திருக்கின்றர்; எத்தனை கள்ளக் கடத்தலைக் கண்டுபிடித்துத் தடுத்திருக்கின்றனர். இது பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் நியமித்து விசாரணை செய்தால் இராணுவம் வடபகுதியில் தேவைதானு என்று அரசாங்கமே ஆலோசனை செய்ய வேண்டியேற் படும்.

சட்டவிரோதக்குடியேற்றத்தைத் தடுப்பதிலும் கள்ளக் கடத்தலைத் தடுப்பதிலும் ஈடுபடுவதை விட இப் பகுதியில் வாழும் அப்பாவி மக்களைப் பலவிதத்திலும் தொல்லைப்படுத்தி இன்பம் காணுவதிலேயே அவர்கள் அதிகம் ஈடுபட்டிருக்கின்றனரென்பதும் தெளிவாகும். இராணுவத்துக்குப் பெருந்தொகைப் பணம் வீண் செலவாவதையும் அரசாங்கமும் இந்நாட்டு மக்களும் அறிந்துகொள்ளவும் வாய்ப்பேற்படும்.

இராணுவத்தை இங்கிருந்து அகற்ற வேண்டுமென்ற கோரிக்கைக்கு 'அடிப்படை' ஏதாவதிருக்குமென்று அரசாங்கம் அஞ்சுகிறதென்றே வைத்துக்கொண்டாலும்......... அப்பாவி மக்களை அனுவசியமாகத் தொந்தரவு செய்யும் இராணுவ சிப்பாய்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கு பொலிசாருக்குப் போன்று இலக்கமோ, வேறு குறிகளோ கொடுப்பதிஞல் என்ன கெட்டுவிடும்.

யும் பாகிஸ்தான் பெருமளவில் பெற்று வருவது அமெரிக்காவுக்குத் தெரிந்தே இருக்கவேண்டும். இரு கம்யூனிஸ வல்லரசுகளின் நட்புநாடென்று தெரிந்தும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆயுதம், பொருளாதார உதவிகளை அளித்து வருவதாயின் அதற்கு என்ன காரணம்? கம்யூனிஸ எதிர்ப்பு என்று இனி அமெரிக்காவும் கூற முடியாது.

0 0 0

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சண்டை நின்றிருப்பினும் இரண்டுக்கும் எந்த நிமிடம் மீண்டும் சண்டை மூளுமோ என்று அஞ்சக்கூடிய நிலை இருக்கிறது. ராஷ்கண்ட் ஒப்பந்தப்படி இரு சார்பினரும் காஷ்மீர் முதலிய பிரச்னைகளைச் சமரசமகத் தீர்த்துக்கொள்ள முன்வரவில்லை. இதற்கு மாருக ஆயுத பலத்தைத் திரட்டி வருவதிலிருந்து இரண்டும் அடுத்த யுத்தத்துக்கே தங்களைத் தயாரித்துக்கொண்டு வருவதாகத் தெரிகிறது. இப்பகுதியில் உண்மையில் அமைதி நிலவவேண்டுமென்ற எண்ணம் யாருக்கும் இருப்பின், அவர்கள் இரு தரப்பினருக்கும் ஆயுதங்களைக் கொடுக்க மறுத்துவிடவேண்டியதே முறை ஆனுல் அமெரிக்காவும், புது சீனமும் பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிகளை அமோகமாக அளிக்கையில், ரஷ்யாவோ இந்தியா, பாகிஸ்தான் இரு நாடுகளுக்கும் ஆயுதங்களைக் கொடுக்கின்றது. ஆயுதங்கள் குவியக்

மாக நடந்து கொண்டார்கள்'' என்றபடியெல்லாம் குற்றச்சாட்டுகள் சர்வசாதாரணமாகச் சுமத்தப்படும் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான்.

பொலிசுத் துறையினரின் மான்யம் விவாதத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது கூறப்பட்ட கருத்துகளை பின்வருமாறு பொதுவாகப் பிரிக்கலாம்.

பொலிசுத் துறையினர் பொதுமக்களைத்துன்புறுத்துகிருர்கள்; மக்களை மரியாதையீனமாக நடத்துகிருர்கள்; கண்டபடி அடிக்கின்ருர்கள் என்ற ரீதியான தாக்குதல் பேச்சு ஒரு பிரிவு.

பொலிசாரின் சம்பளம் மிகமிகக் குறைவு; அவர்களுக்கு வீட்டுவசதி இல்லை என்ற ரீதியில் பொலிசாருக்காகப் பரிந்து பேசியவர்கள் இன்ஞெரு பிரிவினர்.

பொலிசார் தங்களது கடமைகளைச் செய்யவிடாது அரசியல் வாதிகள் தலையிடக் கூடாது; பொலிசார் தங்கள் அதிகாரத்தை தக்கபடி பிரயோகித்தால் தான் அமைதியை நிலைநாட்ட முடியும் என்ற முறையில் பொலிசார் செய்வது சரிதான் என்று நிலைநாட்டும் முயற்சி மற்ற பிரிவு.

பொலிசாருக்கு எதிரான கண்டனக்கணைகளைத் தொடுக்கும் 'படையினருக்கு' கால்ப் பிரதிநிதிதஹ நாயக்கா தலைமை வகித்தார் என்ருல், அவர்களுடைய

டிக்காட்டி, அங்கு போலீசார் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டதாகக் கூறி வன்மையாகக் கண்டித்தார். 'குற்றங்களைக் கண்டுபிடிக்க-துப்பறியும் முயற்சிகளில் ஈடுபடாமல், போலீசார் இன்னும் சந்தேக நபர்களை நையப்புடைத்து, மிளகாய்த்தூள் போட்டு, கைகளில் ஊசி ஏற்றி, அவர்களிடமிருந்து தகவல்கள் பெற முயற்சிக்கிருர்கள்' என்று சொல்லி, 'பொதுமக்களையும் அவர்கள் சார்பில் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் பிரதிநிதிகளையும் மரியாதையுடன் கண்ணியமாக நடத்த பொலிசார் இல்லாவிட்டல் அவர்களுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று பொரிந்துதள்ளிஞர் தகா'. என்று பொலிசாரைக் கண்டிப்பவர்களைக் கூட கண்டிக்க ஆரம்பித்தார்.

### ஜே.ஆர்.எதிர்ப்பு

தகாவின் கர்ண கடூரமான தாக்குதல் பேச்சை ஜே. ஆரால் தாங்கிக் கொண்டிருக்க முடியவில்லை போலும். 'தகாநாயக்கா பிரதமராக சில மாதம் இருந்த காலத்தில் தனது தனிப்பட்டபாதுகாப்புக்காக அவர் பொலிஸ் படையினரைப் பயன்படுத்திய விதங்களை நாசுக்காகச் சுட்டிக்காட்டி. ஒரு தட்டு தட்டிவிட்டு. 'எந்த நாட்டிஞலும் ஏன் சோஷலிஸ நாடுகளான ரஷ்யா, சீஞவில்


... டைக்காக்க, அரசைக்காக்கப் பாடுபடும் அவர்களைக் கண்டபடி கண்ட இடங்களில் தாக்கிப் பேசுவதைத் தவிர்க்கவேண்டும்' என்று சொன்ன ஜே.ஆர். காலஞ்சென்ற பண்டாரநாயக்கா 1958ம் ஆண்டில், 24 மணி நேரம் சுணங்கி, நடவடிக்கை எடுத்ததால்தான் நூற்றுக்கணக்கான மக்கள் அநியாயமாக உயிரிலக்க வேண்டியயிருந்தது எனச் சுட்டிக்காட்டிஞர். கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தருணத்தில் எடுத்திருந்தால் 1958 கலவரமே வந்திருக்காது என்பது ஜே. ஆரின் வாதம்.

### செல்வாவும் இரத்தினமும்

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருவாளர்கள் எஸ். ஜே. வி செல்வநாயகமும் கா. பொ. இரத்தினமும், தமிழ்ப் பகுதிகளில் சிங்களப் பொலிசார் அனுப்பப்படுவதால், அங்குள்ளவர்கள் தாங்கள் அறிந்த ஒரே மொழியான தமிழ் மொழியில் முறைப்பாடுகளைச் செய்யமுடியாதிருக்கிறது என்று குறைபட்டுக் கொண்டார்கள்.

''சிங்கள மொழியை உத்தியோக மொழியாக அமுல் நடத்தும் முயற்சியில், சிங்கள உத்தியோகத்தர்களை-பொலிஸ்காரர்களைத் தான் தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்பவேண்டுமென்ருல், தமிழ் மக்கள் தமிழில் செய்யும் முறைப்பாடுகளைத் தமிழிலேயே பதிவுசெய்யக்கூடிய அளவுக்கு தமிழ்மக்களுடன் தமிழில் பேசக்கூடிய அளவுக்கு அந்தச் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ்படித்தவுடன் அவர்களை அனுப்பி வையுங்கள்'' என்ற நடுவழியொன்றை காட்டிஞர் தமிழரசுத் தலைவர் செல்வநாயகம்.

# றமழான் குரலொலி



''தங்களின் முதல்களை (அல்லாஹ்) இறைவனின் பாதையில் (தர்மம் செய்து) செலவிடுவோருக்கு உவமை ஒரு வித்தைப்போன்று (நடப்பட்ட) அ(வ்வித்)து முளைத்து பருவகால மெய்தியதும்ஏழுகதிர்களை வெளியிடுகிறது ஒவ்வொருகதிர்களிலும் (நடப்பட்டதைப்போன்று நூறு வித்துக்கள் இருக்கின்றன. அல்லாஹ்தான் நாடியவர்களுக்கு (கூலியை) இரட்டிப்பாக்கிக் கொடுப்பான்; அல்லாஹ் விசாலமுடையோனும், மிகவும் அறிந்தோனுமாயிருக்கிருன் ''

—:சதகல்லாஹுல் அழீம் :—

(கலாமுல்லாஹ்: 2 ம் அத்தியாயம்: 261-ம் வசனம்)

விவசாயிகள் தங்களின் வயல்களில் முளைகளை தூவி விடுகின்றனர். அறுவடையின்பின் தூவிய முளையினும் அதிக அளவு தானியங்களைப் பெறுகின்றனரே தவிர, அதேயளவு தானியத்தையல்ல ஒரு வித்திஞல் ஏழு கதிர்களிலும் மொத்தம் எழுநூறு கிட்டுமாப்போல தனக்கின்றி தானம் வழங்கும் தனவந்தர்கள் இறைவனிடமிருந்து அதிக அளவு லாபத்தை எதிர்பார்க்க வல்லவர்கள்.

மேலுள்ள வசனத்தில் இறைவன் அவன் பாதையில் செலவு செய்வதன் மகிமையை எடுத்துரைப்பதஞல் இந்த றமழான் மாதத்தில் நாமும் ஈகை புரிந்து ஈடேற்றம் பெறுவோமாக.

அல்லாஹும்மஜ் அல்ஞ லிஸ் ஸகாத்தி பாஇலீன் ஆமீன்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹஸன் [கபூரி]

**தொழுகை நேரங்கள் :-**

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-26 |

## படுக்கையில் இடந்த

(2- ம் பக்கத் தொடர்ச்சி)

திற்குஎனக்கு செக் கிடைக்கவில்லை. எந்த பாங்கிலும் பணம் பெறுவதற்காக 14,889 ரூபாவிற்கு செக்கொன்றை நான் எதிரியிடம் கொடுக்கவில்லை, 22-1-66ல் எனது தாயார் எதிரியின் வீட்டிற்குவந்தார் அவர் எனது மூத்த சகோதரன் பாலேந்திரனுடனும், சிவானந்தன், திருநாவற்கரசு ஆகியோருடனும் வந்தார். கட்டாயப்படுத்தி எதிரி எல்லாப்பணத்தையும் எடுத்துவிட்டதாக என் தாயாரிடம் கூறினேன் பணம் எடுப்பதற்குயார் அனுமதி கொடுத்ததென்று எனதுதாயார் எதிரியிடம் கேட்டார்இதுபற்றிகேட்பதற்குநீயார் என்றுஎதிரி கேட்டார். அப்பொழுது எனது தாயார் என்னை வீட்டிற்கு வரும்படி கேட்டார். எனது பணமெல்லாவற்றையும் தருவதோடு என்னை திருகோணமலைக்கு கூட்டிச் சென்ருல் நான்தாயாருடன் போகவில்லைஎன எதிரிக்குச் சொன்னேன். எனது வேண்டுகோளை எதிரி ஏற்கமறுத்து விட்டார். அதன்பின் நான் தாயாருடன் சென்றேன். 25-1-66ல் நான் யாழ்ப்பாணம் உதவிபொலிஸ் அதிபருக்கு பெட்டிசமொன்றை அனுப்பினேன்

திருமலையிலுள்ள 'திருமலை கிளினிக்' உரிமையாளரான டாக்டர் ராஜகோபால் ராஜரத்தினத்தின் மனைவி பாலேஸ்வரி யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்ததை தொடர்ந்து அவரது மாமஞை முன்ஞள் புகையிரத நிலைய அதிபர் திரு. நாகமுத்து ராஜரத்தினம் மீது அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையின்பேரிலும் உத்தரவின் பேரிலும் இவ்வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளது எதிரி மீது கீழ்க்காணும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் பாலேஸ்வரியைப்பலவாருக பயமுறுத்தி பணத்தை கைப்பற்றியதாகவும், மோசடியாக அல்லது நேர்மையீனமாக பாலேஸ்வரி சார்பாக, மத்திய வங்கியில் செக்கை மாற்றியதாகவும். கொழும்புநகரிலுள்ள இலங்கை வங்கி விகிதரை ஏமாற்றியதாகவும் நாகமுத்து ராஜரத்தினம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது

பொலிஸார் இவ்வழக்கில் 29 சாட்சிகளை, வழக்காளி பக்க சார்பில் கொடுத்துள்ளனர். எதிரியின் இரு புதல்விகள், இலங்கை சேமிப்பு வங்கி மனேஜர், இலங்கை வங்கி நகரகிளை மனேஜர், இலங்கை மத்தியவங்கி கவர்னர், போஸ்மாஸ்டர் ஜெனரல், கொழும்பு மத்திய வங்கி கணக்காளர், யாழ்ப்பாணம் தபால் நிலைய விசாரணை உத்தியோகத்தர் ஆகியோர் இச்சாட்சிகளின் சிலராவர்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 -ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சொல்லம்புகள்

தஹநாயகா; எத்தனை முயற்சிகள் எடுத்தாலும் நாய் வாலை நிமிர்த்த முடியாததுபோலவே பொலிசாரின் முரட்டுத்தனமான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை எந்த அரசாலும் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது.

0 0 0

தஹா: தெகிவளைநகரசபை உறுப்பினரொருவரைப் பொலிஸ் நிலையத்தில் வைத்து, பொலிசார் தாக்கியபோது, ''நான் ஒரு மெம்பர், நான் ஒரு மெம்பர்'' என்று ஓலமிட்டிருக்கிருர். ''மெம்பரெல்லாம் நொவெம்பர் ஆகட்டும்'' என்று சொல்லிக்கண்டபடி தாக்கியிருக்கின்றனர் பொலிசார்.

0 0 0

தஹா: பொலிசாரின் அத்துமீறிய நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி, பொலிசாருக்கு எதிராக கடந்த 25 வருடங்களாகத் தொடர்ந்து ஆட்சி மன்றத்தில் பேசிய ஒரே எம். பி. நான்தான்; நான் ஒருகாலத்திலும் பொலிசாரை வாழ்த்தியதில்லை!

ரத்னதேசப்பிரிய சேனநாயகா: சோஷலிஸ நாடுகளில் பொலிசுப்படைகிடையாது.

ஜே. ஆர்.ஜெயவர்த்தஞ: இரகசியப்பொலிஸ் இருக்கிறதுதானே?

சேனநாயகா: ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜண்டுகளின் சதி முயற்சிகளை முறியடிக்க இரகசியப் பொலிஸ் இருக்கின்றது!

0 0 0

சேஞபால சமரசேகரா: பாக்குவெட்டிக்குள் அகப்பட்ட பாக்குபோல பொலிசார் எல்லாப்பக்கத்தாலும் தாக்கப்பட்டுத்தவிக்கிருர்கள்.

## அபராதம்

வல்வெட்டித்துறை, சனி

தொண்டமஞறு கெருடாவிலைச் சேர்ந்த கு காத்தான் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த மு: குணரத்தினம் என்பவருக்கு இவ்வருடம் ஆடிமாதம் 24-ந் திகதி தலையில் போத்திலால் அடித்து காயம் விளைவித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்டவழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ருபா 75 அபராதம் விதித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

**கதிரவேலு தம்பிப்பிள்ளை**

சாவகச்சேரி

சாவகச்சேரி, கெருடாவிலைச் சேர்ந்தவரும் ஓய்வு பெற்ற பாடசாலை டாப்புகள் பரிசோதகரும், கெருடாவில் சரஸ்வதி வித்தியாலய மனேஜரும் ஆகிய கதிரவேலு தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி (ஆசிரியை, கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை) வரதலட்சுமி, யோகலட்மி ஆகியோரின் அருமைத் தந்தையும், என். சிவஞானம் (ஆசிரியர், இந்துக் கல்லூரி, சாவகச்சேரி) கே. சந்திரதாஸ் (காசின் கம்பர் பாஜ் கம்பனி, கொழும்பு) ஏ. நாகேந்திரம் (பாம் மனேஜர், R. V. D. B. அம்பாறை) ஆகியோரின் மாமஞரும், என். ஆறுமுகம் (மத்திய வங்கி) என்பவரின் மைத்துனருமாவார். அன்ஞரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று (22-11-70) மாலை 3 மணியளவில் அன்ஞரது இல்லத்திலிருந்து சாவகச்சேரி கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். 8154

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org